# ஆரம்பக்கல்வி




ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

மலர் 22 } மே 1961 { இதழ் 5


# எங்கும் தரக் குறைவு என்பதே பேச்சு!

நம்முடைய நாட்டில் அளிக்கப்பட்டுவருகின்ற கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்னும் பேச்சு, சென்ற சில ஆண்டுகளாக அடிக்கடி எழுப்பப்பட்டுவருவதை நாம் கண்டுவருகிறோம். நாட்டை ஆளும் அமைச்சர் பெருமக்கள்முதல் வீட்டை ஆளும் குடும்பத் தலைவர்கள் வரை, பட்டமளிப்பு விழாக்களில், விரிவுரையாற்றும் பேரறிஞர்கள்முதல் பல்வேறு சங்கங்களில் சொற்பொழிவாற்றும் நல்லறிவாளர்கள் வரை, பொறுப்பும் சிறப்புமிக்க பதவிகளில் வீற்றிருக்கும் அதிகாரிகள்முதல் செல்வாக்கும் புகழும்மிக்க பத்திரிகைகளின் ஆசிரியர்கள்வரை, பல்வேறு சாராரும் இந்தக் குற்றச்சாட்டை எழுப்பிவருகிறார்கள். இந்த நாட்டில் கல்வியின் தரம் எந்த அளவில் குறைந்துவிட்டது—பெரிய அளவிலா — மிகப் பெரிய அளவிலா —

சிறிய அளவிலா—மிகச் சிறிய அளவிலா என்பதை முடிவுகட்டுகிற பிரச்சினையில் வேண்டுமானால் கருத்து வேறுபாடு இருக்கக்கூடுமே தவிர, பொதுவாகப் பார்க்குமிடத்துக் கல்வியின் தரம் குறைந்து தான் இருக்கிறது என்கிற உண்மை, ஏறத்தாழ எல்லா அறிஞர் பெருமக்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்ட ஒன்று.

கல்வியின் தரம் குறைந்திருப்பதற்கான காரணங்கள் என்னென்ன என்பதை ஆராய்ந்து அறிவதும், அப்படி அறிந்தபின் அவற்றைப் போக்குவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவ்வெவை என்பதை உய்த்து உணர்வதும், அப்படி உணர்ந்தபின் அந்த நடவடிக்கைகள் அனைத்தையும் செயல்முறைப் படுத்துவதில் முழு ஆர்வத்துடன் ஈடுபடுவதும் நாட்டின் நலன் நாடும் நல்லறிவாளர்கள் அனைவருடைய தனிப் பெருங் கடமையாகும். ஏனென்றால் ஒரு நாட்டினுடைய முன்னேற்றம், அந்த நாட்டில் அளிக்கப்படுகிற கல்வியின் முன்னேற்றத்தையே பொறுத்திருக்கிறது. அந்தக் கல்வியின் முன்னேற்றமோ, அந்தக் கல்வியின் தரம் எந்த அளவு உயர்ந்துள்ளது என்பதையே பொறுத்திருக்கிறது.

அண்மைக் காலத்தில் நம்முடைய நாட்டில் கல்வியின் தரம் தாழ்ந்துபோய் இருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன என்றாலும், அவற்றிலெல்லாம் தலைசிறந்த காரணமாக இருப்பது, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நெருக்கமான நேர்முகத் தொடர்பு இல்லாததே ஆகும். ஒவ்வோர் ஆசிரியராலும் பாடம் புகட்டப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வருகிறது. இதன் காரணமாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே நெருக்கமான தொடர்போ நேர்முகத் தொடர்போ இருக்க முடியாமற்போய் இருக்கிறது.

பாடங்களை விரைவில் கற்றுக்கொள்ளும் ஆற்றலிலும், கற்ற பாடங்களை நெஞ்சில் நிறுத்திக் கொள்ளும் திறமையிலும், கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவிக்கின்ற சக்தியிலும், மாணவர்கள் ஒருவருக்கொருவர் வேறுபாடு உள்ளவர்கள். ஒரு முறை எடுத்துச் சொன்னவுடனே, பாடத்தைப் புரிந்து கொள்கிற ஆற்றல் சில மாணவர்களுக்கு இருக்கும். மூன்று அல்லது நான்கு முறை எடுத்துச் சொன்னால் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடிய தன்மை வேறு சில மாணவர்களுக்கு இருக்கும். ஏழெட்டு முறை திருப்பித் திருப்பிச் சொல்லப்பட்டால்தான் கற்றுக்கொள்கிற நிலை மற்றும் சில மாணவர்களுக்கு இருக்கும். எந்தெந்த மாணவர்களிடம் எந்தெந்த அளவு திறமை இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அவரவர்களுக்கு ஏற்றவண்ணம் கல்வியைக் கற்பிக்க வேண்டு

னால் ஒவ்வோர் ஆசிரியராலும் கவனிக்கப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கவேண்டும். பண்டைக் காலக் குருகுல முறையில் கற்றுத் தேர்ந்த மாணவர்களின் திறமை மிகச் சிறந்ததாக விளங்கியதற்குக் காரணம் ஒவ்வோர் ஆசிரியரிடமும் மிகச் சில மாணவர்கள் மட்டுமே ஒப்படைக்கப்பட்ட உயர்ந்த நிலையே ஆகும். வரலாற்றுப் புகழ்மிக்க நாளந்தா பல்கலைக்கழகத்தில் பத்து மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கிற விகிதத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கை இருந்தது என்று வரலாற்று ஏடுகள் தெரிவிக்கின்றன. அந்தப் பல்கலைக் கழகத்தில் பயின்றுகொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை பத்தாயிரம் என்றும், அங்கே பயிற்றுவித்துக் கொண்டிருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை ஏறக்தாழ ஆயிரம் என்றும் தெரிகிறது. நிலைமை இப்படி இருக்குமானால், அளிக்கப்படுகிற கல்வியின் தரம் மிக உயர்ந்ததாக இருந்திருக்கும் என்பதில் ஐயம் ஏது?

ஆனல் இந்தக் காலத்தில் உள்ள நிலையோ...! நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறது. ஒவ்வோர் ஆசிரியரும் அவருடைய சக்திக்கு மீறிய எண்ணிக்கை கொண்ட மாணவர்கட்குக் கல்வி கற்பித்துத் தீர வேண்டியிருக்கிறது. ஆரம்பப் பள்ளிக்கூடம், உயர்நிலைக் கல்விக் கூடம், கல்லூரி—இந்த மூவகைக் கல்வி நிலையங்களிலும் வேதனையும் விபரீதமும் மிகுந்த இந்த நிலைமைதான் காட்சியளிக்கிறது. குறிப்பாகவும் சிறப்பாகவும் கல்லூரிகளில் பல வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை, எண்பது — நூறு— நூற்றி ஐம்பது என்று இருக்கக் காண்கிறோம். சில தொழிற் கல்லூரிகளில் ஒரே வகுப்பில் இரு நூறு மாணவர்கள்கூட உட்கார்ந்திருக்கிற விசித்திரமான காட்சியைக் காண்கிறோம். இப்படிப்பட்ட வகுப்புகளை, வகுப்புகள் என்று அழைப்பதைவிடப் பொதுக்கூட்டங்கள் என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும்!

இப்படியெல்லாம் மாணவர்களின் எண்ணிக்கை ஒரு சிறிய பொதுக்கூட்டத்தின் அளவுக்கு இருக்குமானல், ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும், இடையே நெருக்கமான தொடர்பு எப்படி இருக்க முடியும்? தொடர்பு இல்லாவிட்டால் போகட்டும்—தன் வகுப்பில் உள்ள மாணவர்கள் அனைவருடைய பெயர்களையாவது ஆசிரியரால் நினைவு வைத்துக்கொள்ள முடியுமா? அதுகூட வேண்டாம். ஒரு மாணவன், தன் வகுப்பைச் சேர்ந்தவன்தான அல்லவா என்பதையாவது அவரால் தெரிந்துகொள்ள முடியுமா? இப்படிப்பட்ட நிலையில், தான் அளித்த கல்வியை ஒவ்வோர் மாணவனும் ஏற்றுக்கொண்டான இல்லையா—எந்த அளவு ஏற்றுக்கொண்டான்—அந்த அளவு போதுமானதுதான—இல்லையென்றல், அந்த அளவை

உயர்த்துவது எப்படி என்பவற்றையெல்லாம் ஆசிரியர் எவ்வாறு கண்டறிய முடியும்?

மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சிறிதளவும் தொடர்பு இல்லாத இந்த நிலையால், மாணவர்களிடையே ஒழுங்கின்மையும் கட்டுப்பாடின்மையும் ஓங்கி வளர்கின்றன. அவர்களுடைய நினைப்பும் நடவடிக்கையும் கல்வித் திசையை விடுத்து வேறு திசைகளில் திரும்புகின்றன. வேலை நிறுத்தம் (அதாவது படிப்பு நிறுத்தம்), கிளர்ச்சி, கட்சி அரசியல் குழப்பங்களில் ஈடுபடுதல், ஆசிரியர்களிடம் பணிவு காட்டாமல் அலைதல் முதலிய விரும்பத்தகாத விளைவுகள் உருவாகின்றன. இத்தனை நச்சுவளையங்களுக்கு நடுவில் மாணவர்கள் மிகச் சிறு அளவில் மட்டுமே கல்வி யறிவைத் தங்களுடைய உள்ளங்களில் ஏற்றிக் கொள்ள முடிகிறது.

இத்தகைய நிலைமையால் மாணவர்களின் அறிவும் ஆற்றலும் பொன்னான நேரமும் முயற்சியும் உழைப்பும் இளமைப் பருவமும் பாழாகின்றன என்பது மட்டுமல்ல, ஆசிரியர்களின் அறிவும் ஆற்றலும் அரிய முயற்சியும் சிறந்த நேரமும் பாழாகின்றன. ஆசிரியர்களுக்கு மாணவர்களிடம் இயல்பாக இருக்கவேண்டிய அளவு செல்வாக்கும் சிறப்பும் இல்லாமற் போய்விடுகின்றன. அளிக்கப்படுகின்ற கல்வியை ஆர்வத்தோடும் துடிப்போடும் ஏற்றுக்கொள்கிற நிலையில் இல்லாத மாணவர்களிடம் ஆசிரியர்கள் தாங்கள் அரும்பாடுபட்டு ஈட்டிய கல்விப் பொருளை வழங்குவது, ஒன்றுமே விளையாத பாலைவனத்தின்மீது அருமையான நெல் விதைகளைத் தூவுவது போன்ற பயனற்ற முயற்சியாகவே முடிகிறது.

ஓர் இயந்திரத்தை முடுக்கிவிட்டவுடனே அது ஓயாமற் சுழன்று ஒரு பண்டத்தின் ஆயிரக்கணக்கான படிகளை உருவாக்கிக் குவித்துக் கொண்டே இருக்கிறதே, அது போன்ற நிலையில் இருப்பவர் அல்லர் ஆசிரியர்; அவரால் ஒரே சமயத்தில் எத்தனை நூறு மாணவர்களை வேண்டுமானாலும் தேவையான அறிவும் ஆற்றலும் உடையவர்களாக மாற்றி அமைத்துவிட முடியாது. அவர் ஓர் இயந்திரமன்று அவ்வாறு செய்திட. நம் எல்லோரையும் போல ஒரு குறிப்பிட்ட அளவு சக்தி மட்டுமே உடைய மனிதர்தான் அவரும். அந்த அளவுக்கு மாணவர்களை அவரிடம் ஒப்படைத்தால்மட்டுமே அவரால் அவர்களை அருந்திறல் மிக்கவர்களாக மாற்றி அமைக்க முடியும். அப்படியின்றி அளவுக்கு மீறிய மாணவர்களை அவரிடம் ஒப்படைத்தால், அவர்கள் அனைவருக்கும் ஏதோ ஒரு விதமான கல்வியைத்தான் அவரால் தரமுடியும். இந்த உண்மையை அரசாங்கமும் சரி, பொது மக்களும் சரி, எத்

துணை விரைவில் உணர்ந்து கொள்கிறார்களோ அத்துணை விரைவில் தான் இந்த நாட்டின் கல்வித் தரம் உயரும்.

கல்வியின் தரம் குறைந்திருப்பதற்கான மற்றோர் காரணம், ஆசிரியப் பெருமக்கட்கு அளிக்கப்படுகின்ற ஊதியம் குறைவாக இருப்பதே ஆகும். அண்மைக்காலத்தில் அந்த ஊதியத்தின் அளவு ஓரளவு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அந்த அளவு போதாது. சிறந்த அறிவும் ஆற்றலும் படைத்தவர்கள், வேறு பல தொழில் துறைகளில் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், அவர்களெல்லாம் அந்தத் துறைகளை விட்டுவிட்டு ஆசிரியத் துறைக்கு வந்துவிடவேண்டும் என்னும் துடிப்புணர்ச்சி கொள்கிற அளவுக்கு ஆசிரியர்களின் ஊதியம் உயர்த்தப்படவேண்டும். உண்மையை ஒளிக்காது சொல்லவேண்டுமானால், இன்றையதினம் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரிற் பெரும்பாலோர், அவர்கட்கு இதைவிட அதிக ஊதியம் தரத்தக்க வேறு தொழில் கிடைக்குமானால் உடனே சென்றுவிடத் தயாராகவே உள்ளனர். அப்படிச் சென்றவர்கள் பலர் உள்ளனர். ஆசிரியத் தொழிலில் இருந்தவரையில் வறுமைக்கும் துயரத்திற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்த அவர்கள், பிற தொழில்களை ஏற்றபிறகு செல்வமும் செல்வாக்கும் மிக்கவர்களாக மாறியிருப்பது வெள்ளிடைமலை. இந்த நிலை மாறி, ஆசிரியத் தொழிலா—அது அல்லவா செல்வாக்கு மிக்க தொழில்—அங்கல்லவா நான் இருக்க வேண்டும்—எப்பாடு பட்டாவது அத்தொழிலை அல்லவா நான் பெறவேண்டும் என்று மற்றவர்கள் எண்ணி ஏங்குகிற நிலை உருவாக்கப்படவேண்டும்.

கல்வியின் தரம் குறைந்திருப்பதற்கான இன்னோர் காரணம், ஆட்சியாளர்கள் இந்த நாட்டில் கல்வித் திட்டங்களை அடிக்கடி மாற்றிக்கொண்டே இருப்பதாகும் கல்வி உலகத்தில் ஒரு வகையான அமைதியும் நிலைபெற்ற தன்மையும் இருக்கவேண்டும். எந்த நேரத்தில் எந்தக் கல்வித் திட்டம் மாற்றப்படுமோ என்று கல்வித் துறைப் பணியாளர்கள் அஞ்சிக்கொண்டிருக்கிற நிலை இருத்தல் ஆகாது. அடிக்கடி கல்வித் திட்டங்களை மாற்றிக்கொண்டே இருப்பதால், மாணவர்களுக்கும் துன்பம்; ஆசியரிர்களுக்கும் சங்கடம்; பெற்றோர்களுக்கும் தொல்லை; சமுதாயத்திற்கும் தலைவலி. எந்தக் காரணத்தை முன்னிட்டும் எந்தக்காலத்திலும் கல்வித் திட்டத்தை மாற்றவே கூடாது என்று நாம் கூறவில்லை. நியாயமான காரணங்கள் இருக்குமானால் எப்போதோ ஒரு முறை, அத்தி பூத்தாற்போல என்பார்களே அது போன்ற முறையில், கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாக இருக்கலாம். ஆனால் இந்த நாட்டில் இப்போதெல்லாம் செய்யப்

படுகிற மாறுதல் அத்தன்மையது அல்ல. ஒவ்வோர் கல்வி அமைச்சர் பதவிப் பீடத்தில் அமர்கிறபோதும் அவருடைய விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பக் கல்வித் திட்டத்தில் சில மாறுதல்கள் செய்யப்படுகின்றன. இந்த முறை, விரும்பத்தகாதது மட்டுமல்ல விபரீதமான விளைவுகளைக் கொண்டதும் ஆகும்.

கல்வித் திட்டத்தில் செய்யப்படும் மாறுதல்களை, கல்வித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களைக் கலந்து ஆலோசித்து அவர்கள் ஒப்புதலைப் பெருமலே செய்துவிடுவது இந்த நாட்டு அரசாங்கங்கட்குப் பழகிப் போய்விட்ட ஒரு செயல்முறையாகக் காணப்படுகிறது. ஆரம்பக் கல்வித் துறையைப் பொறுத்த அளவில், அந்தத் துறையில் அவ்வப் போது தாங்கள் புகுத்தும் மாறுதல்களைப் பற்றி இந்த மாநிலத்து ஆட்சியாளர்கள், ஆரம்பப்பள்ளி நிர்வாகிகளையும் கலந்து யோசிப்பதில்லை; ஆரம்ப ஆசிரியர்களையும் அழைத்து ஆய்வுரை கேட்பதில்லை. இப்படிப்பட்ட மாறுதல்களால் கல்வியின் தரம் எந்த அளவு குறையும் என்பதை உணர அரிய பெரிய ஆராய்ச்சியா தேவை?

தனியார் பள்ளி நிர்வாகிகட்கு அரசாங்கத்தார் போதுமான ஆதரவு அளிக்காமல் இருப்பதும், அந்த நிர்வாகிகட்கு அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்களாலும் ஏற்பாடுகளாலும் பலவகைத் தொல்லைகளும் சிக்கல்களும் இடுக்கண்களும் உருவாகியிருப்பதும், கல்வித் தரக் குறைவிற்கான மற்றோர் காரணம் ஆகும்.

அரசாங்கப் பள்ளிகள்—நகராட்சி மன்றம் முதலிய உள்ளாட்சி மன்றப் பள்ளிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் கல்வியின் தரத்தை விடத் தனியார் நிர்வாகத்தில் உள்ள பள்ளிகளில் தரப்படும் கல்வி மிக உயர்ந்ததாக இருக்கிறது என்பது நாடறிந்த உண்மை. இந்த நிலையில் கல்வியின் தரம் உயரவேண்டும் என்பதில் ஆட்சியாளர்களுக்கு ஆர்வமும் அக்கறையும் இருக்கவேண்டுமாளுல் அவர்கள் செய்யவேண்டியது யாது? தனியார் பள்ளி நிர்வாகிகட்கு மேலும் மேலும் ஊக்கம் ஊட்டத்தக்க வகையில் போதுமான பண உதவியும் பிற உதவிகளும் செய்வதுதானே! ஆளுல் சென்ற சில ஆண்டுகளில் தமிழ் நாட்டு அரசாங்கத்தார், தனியார் பள்ளி நிர்வாகிகட்கு அளிக்கும் உதவித் தொகையினை உயர்த்துவதற்கு மாருக அதனைக் குறைத்துவிட்டார்கள். "ஐந்தாவது வகுப்பு வரை கட்டணமில்லாத கல்வி" என்னும் திட்டம் நடைமுறைக்கு வந்ததுமுதல், உதவி பெறும் தனியார் தொடக்கப்பள்ளிகளின் பொருளாதார நெருக்கடி பயங்கரமான அளவும் நிலையும் படைத்ததாக மாறிவிட்டது. அரசாங்கத்தார் தற்போது அளித்து வருகிற மிகக் குறைந்த உதவித் தொகையைக் கொண்டு பள்ளிக்கூடத்தின் நிர்வாகச் செலவு

(11-ம் பக்கம் பார்க்க)

# பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கும் ஓர் அன்பான வேண்டுகோள்!

---

அன்புகெழுமிய ஆரம்பப் பள்ளி—உயர் நிலைப்பள்ளி நிர்வாகிகளே! ஆற்றல் கெழுமிய ஆசிரியப் பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்புகலந்த வணக்கம். உங்களுடைய பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய "**ஆரம்பக்கல்வி**" இதழானது சென்ற இருபத்திமூன்று ஆண்டுகளாக உங்களுடைய முன்னேற்றத்திற்காகவும் நல்வாழ்வுக்காகவும் ஓயாமல் உழைத்து வருவதை நீங்கள் நன்றாக உணர்வீர்கள். இந்த "**ஆரம்பக் கல்வி**" இதழானது, ஆரம்ப ஆசிரியர்கட்கும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகட்கும் துயரம் நேர்ந்த போதெல்லாம் அதைத் தடுத்து நிறுத்த முனைந்திருக்கிறது; ஆபத்துகள் அடுக்கடுக்காக ஏற்பட்ட வேளைகளில் எல்லாம் அவற்றைத் தொகையாக எதிர்நிறுத்தித் தூள்தூளாக்கியிருக்கிறது; அவர்களுடைய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடத்தக்க ஏற்பாடுகளும் திட்டங்களும் ஆட்சியாளர்களிடமிருந்து புறப்பட்ட காலங்களிலெல்லாம் கிளர்ச்சிப் புயலைக் கிளப்பி, அந்த ஏற்பாடுகளைப் பின்வாங்கச் செய்திருக்கிறது; ஆசிரியர்களும் நிர்வாகிகளும் சோர்ந்து கிடந்த வேளைகளிலெல்லாம் அவர்களுக்குச் சுறுசுறுப்பை ஊட்டி, அவர்கள் உறங்கிக் கிடந்த நேரங்களிலெல்லாம் தட்டியெழுப்பி, அவர்கள் வேதனைக்கீதம் பாடிக்கிடந்த சமயங்களிலெல்லாம் "கிளர்ந்தெழுந்து பணியாற்றுபவர்களுக்குத் தான் பொலிவும் வலிவும் மிகுந்த வாழ்க்கை கிடைக்கும்" என்கிற ஜனநாயக அரிச்சுவடியை நினைப்பூட்டியிருக்கிறது. ஆசிரியர்கள்—நிர்வாகிகள் ஆகியோரின் செழிப்புக்காகவும் சிறப்புக்காகவும் இதுவரை பாடுபட்டு வந்ததைப் போலவே "ஆரம்பக்கல்வி" இதழானது இனியும் முழுமூச்சுடன் பணியாற்றும் என்பது உறுதி.

இந்த இதழின் செழிப்புக்காகவும் சிறப்புக்காகவும் நம்மால் வெளியிடப் படும் "அசோசியேஷன் பப்ளிஷிங் ஹவுஸ்" பாடப்புத்தகங்களை நீங்கள் சென்ற பல ஆண்டுகளில் உங்கள் பள்ளிக்கூடங்களில் வைத்து ஆதரித்தது போலவே, இந்த ஆண்டிலும் வைத்து ஆதரிக்க வேண்டுமென்று உங்களை அன்போடும் பணிவோடும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

## தஞ்சை மாவட்ட உதவி பெறும் துவக்கப் பள்ளி
# ஆசிரிய நிர்வாகிகள்—நிர்வாகிகள் மாநாடு
### 22-4-61
### செம்போடை
### திரு. K. ரங்கசாமி அய்யங்கார்
### அவர்கள் ஆற்றிய
# வரவேற்புரை

---

**தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இங்கு விஜயம் செய்துள்ள நிருவாகிகளே! ஆசிரிய நிருவாகிகளே!! உங்கள் அனைவரையும் மனமார வரவேற்கிறேன்.**

கல்வித்துறையில் பல நல்ல சீர்திருத்தங்களுக்கு நமது இராஜ்யம் முன்னணியில் இருக்கிறது. மதிய உணவுத்திட்டம், பள்ளிச் சீரமைப்புத் திட்டம், இலவச உடையளிக்கும் திட்டம், இலவச கல்வி அளிக்கும் திட்டம் முதலியவை அமுலுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளன. ஆசிரியர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தும் திட்டங்களான சம்பள விகிதங்களை உயர்த்துதல், கல்வித்துறையில் அரும்பணி புரிந்துள்ள ஆசிரியர்களுக்கு விருதுகள், அரசாங்கப் பரிசுகள் வழங்குதல், பென்ஷன், கட்டாய இன்ஷ்யூரன்ஸ் இது போன்ற சீரிய திட்டங்களைக் கொணர்ந்த நமது ராஜ்ய சர்க்காருக்கும், கல்வி இலாகாவினருக்கும் நாம் நன்றிசெலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். 1960 ஜூனிலிருந்து நமது அரசாங்கம், பயிற்சி பெற்ற ஹையர்கிரேடு ஆசிரியருக்கு மாதம் ஒன்றுக்கு அடிப்படை ஊதியம், பஞ்சப்படி இரண்டும் சேர்த்து ரூபாய் 75/-ம், செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியருக்கு ரூபாய் 100/-ம் சம்பளம் அளித்து வருகின்றார்கள். இவ்வுயர்வுக்கு நாம் நமது நன்றியைச் செலுத்துகிறோம். இன்றைய பண்டங்களின் விலைவாசிகளை உற்று நோக்குமிடத்து ஷை சம்பள உயர்வைக் கொண்டு குடும்பத்தைத் திருப்திகரமான முறையில் நடத்துவது சாத்தியமில்லை. ஆனால் அரசாங்கப் பொருள் வசதி, திட்டங்களை நிறைவேற்ற ஆகும் செலவு முதலியவற்றைச் சிந்திக்கும்போது இச்சமயத்தில், ஊதியத்தை உயர்த்தித் தந்துள்ளதற்கு நாம் அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

நமது மாவட்டத்திலுள்ள சுமார் 2710 ஆரம்பப்பள்ளிகளில் சற்றேற 860 பள்ளிகள் நமது நிருவாகத்திலுள்ளன. நாம் அளிக்கும்

கல்வியின் தரம் மிகவும் உயர்ந்தது என்பது யாவரும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை. ஸ்தலஸ்தாபனங்கள் நடத்தும் ஆரம்பப் பள்ளிகளுக்கு ஆகும் செலவைவிட தனியார் நிருவாகத்திலுள்ள பாடசாலைகளுக்குச் செலவு குறைவாகவே இருக்கிறது. இதனை உணர்ந்தே இந்திய அரசாங்கக் கல்வி அமைச்சர் **திரு. ஸ்ரீமாலி, அவர்கள்** தனியார் பாடசாலை நிருவாகிகளின் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அதிகப்படுத்த அரசாங்கம் உதவியளித்தல் இன்றி யமையாதது என்று கூறியிருக்கிறார். இதனை நமது ஆட்சியாளர்கள் சிந்தித்து ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

சென்ற ஆண்டுவரை நமது பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங் கப்பட்ட கற்பிப்புக்கொடையில் 15 சதவிகிதம் வரையில் நிருவாகக் கொடையாகக் கொடுத்து வந்தார்கள். ஆசிரியர்களின் சம்பள உயர்வு காரணமாக மேற்கண்ட நிருவாகக் கொடையை இவ்வாண்டிற்கு, முதல் 5 மாதங்களுக்கு 15 சதவிகிதமாகவும், பின் 7 மாதங்களுக்கு 10 சதவிகிதமாகவும் நிர்ணயம் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. அவ்வாறு செய்திருப்பது நமது பாடசாலைகளை வெகுவாகப் பாதித் திருக்கின்றது. மேலும் சில பள்ளிகளுக்குச் சென்ற ஆண்டில் கிடைத்த நிருவாகக்கொடையைவிட இவ்வாண்டில் மிகவும் குறைந்த நிருவாகக்கொடை கிடைத்திருப்பதாக நான் அறிகிறேன். அத ளுல் நாம் இனி எவ்வாறு பாடசாலையை நடத்திவருவது என்ற நிலை ஏற்பட்டுள்ளபடியால் நம்மைப் பாதிக்கும் இடையூறுகளை நீக்க மனவு றுதியோடும், ஒற்றுமையோடும், கட்டுப்பாட்டுடனும் செயல் புரிய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

நான் முற்கூறியவாறு நமது இராஜ்யத்தில் ஆரம்பக் கல்வியா னது சிறந்த பெருமை அடைந்துள்ளது என்று கூறும்பொழுது அதற்குரிய பெரும்பாலான பணியை வேறு எந்த ஸ்தாபனத்தையும் விட அதிகமான அளவு ஆற்றியிருப்பவர்கள் தனியார் பள்ளி நிரு வாகிகளாகிய நாம் என்பது கண்கூடு. நம்மில் பலர் ஆசிரிய நிருவாகி களாகவே இருக்கின்றனர். பாடசாலைக்கென்று தனி மூலதனமோ வேறுவருவாயோ இல்லை. அரசாங்க உதவியைக்கொண்டே நாம் நமது தொண்டைச்செய்து வருகிறோம். இவ் உதவித்தொகை குறைவு படாமல் நமக்குக் கிடைத்தாலன்றி பாடசாலையை இனி நடத்த இயலாத நிலை ஏற்படும். இந்நிலையை நாம் பெற்றோர்களுக் கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும், கல்வி இலாகாவிற்கும், அரசாங்கத்திற்கும் தெளிவாக விளக்கிக்கூறி நமது பாடசாலைகள் மேலும் உயர்வடைந்து மிளிரச்செய்ய, தகுந்த ஏற்பாடுகளைச் செய்யு மாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடியிற்கண்ட சில புள்ளி விவரங்களைச் சர்க்கார், கல்வி இலாகா அதிகாரிகள் முதலானோரின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். 5 வகுப்புகளைக்கொண்ட ஓர் பாடசாலையை எடுத்துக் கொள்ளுவோம். ஒரு செகண்டரிகிரேடு ஆசிரியர், மற்றும் 4 ஹையர்கிரேடு ஆசிரியர்கள் அவர்களுக்குக் கிடைக்கும் மாதக் கற்பிப்புக்கொடை ரூபாய் 350/-பதினைந்து சதவிகிதப்படி நிருவாகத் தொகைக் கணக்கிட்டாலும் ரூபாய் 52—50 தான் கிடைக்கும். இதற்கு அடியிற்கண்ட உத்தேசச்செலவினங்கள்:—

| | விபரம் | ரூ. ந—பை. |
|---|---|---|
| 1. | கட்டிடம், சிறுநீர் கழிக்குமிடம் முதலியவற்றின் பழுது பார்க்கும் செலவு. | 25—00 |
| 2. | தளவாடசாமான்கள், போதனை சாதனங்கள், விளையாட்டுக்கருவிகள், தொழிற் கருவிகள் முதலிய உபகரணங்கள் வாங்கவும், பழுது பார்க்கவும் ஏற்படுகின்ற செலவு. | 25—00 |
| 3. | ஸ்டேஷனரி, சாதல்வார், மாதிரிப்பாடபுத்தகங்கள் நூல்நிலையப் புத்தகங்கள் வாங்குவது, தபால் செலவு, தொழிற்கல்விக்கான மூலப்பொருள் வாங்குவது, தோட்ட சம்பந்தமான செலவுகள், பரீக்ஷை சம்பந்தமான செலவுகள், முதலியன. | 25—00 |
| 4. | தண்ணீர் ஊற்றுபவர், துப்புரவு செய்பவர், தோட்டப் பாதுகாவலர், ஆசிரியர் சேமிப்பு, நிதிக்கு நிருவாகியின் பங்கு, பள்ளி வேலைக்கான பிரயாணப்படி, சவுக்காரம், சீப்பு, கண்ணாடி, எண்ணெய் முதலியனவும், சாரணர் இயக்கம் பெற்றோர்சங்கம், விளையாட்டு, ஆண்டுவிழா முதலியவற்றுக்கு ஏற்படும் செலவுகளும். | 50—00 |
| | ஆகச்செலவு | 125—00 |

நிருவாகி ஈடு செய்யவேண்டியது ரூபாய் 72-50 இதுபோன்றே முதல் 8 வகுப்புகளுள்ள பாடசாலைகளுக்கும் வரவும் செலவும் இதே விகிதத்தில் இருக்கக்கூடும், ஆதலின் நிருவாகக் கொடையை 25 சதவிகிதத்திற்கு உயர்த்தித்தர வேண்டியது அவசியமாகும்.

பாடசாலையைத் திறம்பட நடத்திச்செல்லும் பொறுப்பும் கடமையும் கொண்ட நிருவாகி மன நிறைவோடு இருக்க அவருக்குக் கிரமமாய்க் கிடைக்கவேண்டிய நிருவாகக்கொடையைப் பிரதிமாதமும் கொடுத்து உற்சாகத்துடன் பள்ளியை நடத்த உதவி செய்ய வேண்டியது அவசியம் என்பதை ஆட்சியாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நாம் கேட்கக்கூடாததும், அளவுக்கு மீறியதுமான கொடையைக் கேட்கவில்லை.

நியாயமானதை அளித்து நம்முடைய உள்ளத்திலும் திருப்தியுணர்ச்சியை உண்டாக்க அரசாங்கத்தையும், கல்வி இலாகா அதிகாரிகளையும் பணிவன்புடன் கேட்கவே நாம் இன்று இங்குக் கூடியிருக்கிறோம். நமக்கு ஏற்பட்டுள்ள பரிதாப நிலையைத் தவிர்க்கவும், அரசாங்கத்திற்கும், கல்வி இலாகா அதிகாரிகளுக்கும் நமது நிலையை நன்கு விளக்கிக்,கூறிப் பரிகாரம் கிடைக்க எல்லா உதவிகளையும் செய்து தருமாறும், நம்மிடையே இன்று இங்கு விஜயஞ்செய்துள்ள சர்தார் **A. வேதரத்தினம் M. L A. அவர்களையும், திரு. C. முத்தையாப் பிள்ளை M L A அவர்களையும், திரு. G. கிருஷ்ணமூர்த்தி M L C அவர்களையும்** வேண்டிக்கொண்டு அவர்களுக்கு நமது மனமுவந்த நன்றியைச் செலுத்தி, உங்கள் சார்பில் வரவேற்கிறேன்.

இம் மாநாட்டில் தக்க பரிசீலனையுடன் உருவாக்கப்படும் தீர்மானங்களுக்கு நல்லாதரவு தர **கனம் முதலமைச்சர் அவர்களையும், கனம் கல்வி அமைச்சர் அவர்களையும், உயர்திரு. கல்வி இயக்குநர் அவர்களையும்** வேண்டிக்கொள்ளுகிறேன்.

வணக்கம்.

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் யாவற்றையும் எப்படிச் சரிக்கட்டுவது என்பது புரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் அப் பள்ளிக்கூட நிர்வாகிகள். இத்தகைய மனக் குழப்பத்தில் சிக்கித் தவிக்கும் அவர்களால் கல்வியின் வளர்ச்சியில் தங்கள் முழுக் கவனத்தையும் முழு ஆற்றலையும் எப்படிச் செலுத்த முடியும்?

கல்வியின் தரம் குறைவதற்கான இந்தக் காரணங்களையெல்லாம் ஆட்சியாளர்கள் அமைதியாக இருந்து ஆராய்ந்து பார்த்து, பொருத்தமான ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொண்டு இந்தக் குறைபாடுகளைக் களைந்தாக வேண்டும். இவற்றைக் களைந்தால்தான் கல்வியின் தரம் உயரும். கல்வியின் தரம் உயர்ந்தால்தான் இந்த நாட்டின் தரமும் திறமும் உயர்வடையும்.

# 22—4—61—ல் திருவாரூரில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட உதவிபெறும் துவக்கப்பள்ளி நிர்வாகிகள் ஆசிரிய—நிர்வாகிகள் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்.

---

1. இம் மாநாடு தமிழ் நாடு கல்வி இயக்குனர் உயர்திரு. N. D. சுந்தரவடிவேலு அவர்களுக்குப் பாரத அரசாங்கத்தாரால் ' பத்ம ஸ்ரீ ' பட்டம் வழங்கப்பட்டமைக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

2. ஆசிரியர்களுக்கு உயர்ந்த சம்பள விகிதத்தை நிர்ணயித்துப் பிரதி மாதமும் முதல் தேதியன்று வழங்க ஏற்பாடு செய்துள்ளமைக்கும், 11 வகுப்பு வரை எல்லா ஏழை மாணாக்கர்களுக்கும் இலவசக் கல்வி அளித்தமைக்கும் நமது மாநில அரசாங்கத்தாருக்கும் இம் மா நாடு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. தமிழ்நாடு அரசாங்கம் தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு விருது வழங்க ஏற்பாடு செய்திருப்பதற்கு இம் மாநாடு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறது.

4. 1960-ம் ஆண்டுக்கு நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்ட மிகக் குறைவான நிர்வாக மான்யம் சம்பந்தமாய் சென்னைக்குச் சென்று கனம் கல்வி அமைச்சர் அவர்களையும், உயர்திரு கல்வி இயக்குனர் அவர்களையும் நமது சங்கப் பிரதிநிதிகள் சென்ற மார்ச் மாதக் கடைசியில் பேட்டி கண்டு தங்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை விண்ணப்பித்துக் கொண்டதற்கு முற்கூறிய இருவரும் அநுதாபத்துடன் கேட்டு மறு பரிசீலனை செய்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்று ஒப்புக்கொண்டதற்கு இம் மாநாடு நன்றிதெரிவித்துக் கொள்வதுடன் தகுந்த அளவில் நிர்வாகிகளுக்கு நிர்வாக மான்யம் அடையச்செய்ய அன்னார்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

5. (அ) நிர்வாக மான்யம் வழங்குவதில் என்னென்ன செலவினங்கட்கு எந்த அளவுத் தொகை ஒதுக்கப்படுகிறது என்பதை நிர்வாகிகளுக்கு முன்கூட்டியே கல்வி இலாகா அதிகாரிகள் திட்டவட்டமாக வரையறுத்துத் தெரிவிக்காதிருக்கும் நிலையில் பள்ளி நிர்வாகச் செலவினங்கள் அதிகரித்து வருவதால்

சத விகிதம் (Fixed grant) ஆக கொடுத்தாலன்றி உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளைத் தொடர்ந்து நடத்த இயலாத நிலை ஏற்படும் என்ற காரணத்தால் (Fixd Flat grant) ஆக எக்காரணத்தைக்கொண்டும் குறைக்கக்கூடாத 15 சத விகித மான்யம் அளிக்குமாறு அரசாங்கத்தை இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(ஆ) புதுச் சம்பளத் திட்டத்தின் பேரில் ஆசிரியர் (Provident Fund) கணக்கிற்குத் தொகை கட்ட முடியாத நிலை நிர்வாகிகளுக்கு ஏற்பட்டுள்ளமையால் டி கணக்கிற்கு நிர்வாகிகள் கட்டவேண்டிய ரூபாய்க்கு அரையணாவை அரசாங்கமே கட்டிவிடுமாறு இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(இ) முன், கேட்கப்பட்ட (Fixed) 15 சத விகித நிர்வாக மான்யம் பாடசாலைக் கட்டட வாடகை அல்லது செலவைத் தவிர மற்ற செலவுகளுக்கே இன்றியமையாத தேவையாதலால் பாடசாலைக் கட்டட வாடகை அல்லது செலவை அரசாங்கமே பிரத்தியேகமாக அளிக்குமாறு இம் மாநாடு வேண்டுகிறது.

பிரதேசத்திற்குத் தக்கபடியும் பாடசாலையின் விஸ்தீர்ணத்திற்குத் தக்கவாறும் ஜில்லாக் கல்வி அதிகாரியாலே இவ்வளவு வாடகை அல்லது ஏற்படக்கூடிய செலவு என்று நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(ஈ) ஆரம்பப் பள்ளிகள் நன்றாக வேலை செய்ய ஊக்கமளிக்க டி 15 சத விகிதத்திற்கு மேல் (Efficiency Percentage Grant) மாதா மாதம் கல்வி அதிகாரிகள் அளிக்குமாறு அரசாங்கத்தார், அவர்களுக்கு அதிகாரமளிக்க இம் மாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

6. 1960-ம் ஆண்டில் சில நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்ட நிர்வாக மான்யத் தொகை அதிகமாக வழங்கப்பட்டதெனக் கருதி நிர்வாகிகளிடமிருந்து திரும்பவும் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைத் தவிர்த்து அத்தகைய நிர்வாகிகள் பாதிக்கப்படாமல் பாடசாலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு வகை செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறது.

7. நிர்வாகிகளுக்கு பஞ்சாயத்துக் கவுன்ஸிலிலும், அரசாங்கத்தாரால் அவ்வப்பொழுது நிறுவப்படும் கல்விக் குழுக்களிலும் போதிய அளவு பிரதிநிதித்துவம் அளிக்கத்தகுந்த ஏற்பாடு செய்யுமாறு இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

8. சம்பளம் வசூலித்து வந்த பள்ளிகளில் வேலைசெய்துவரும் ஆசிரியர்களுக்கு உயர்த்தப்பட்ட சம்பளத்துடன் ஊழிய கால உயர்வு இதுவரை அளிக்கப்படாததால் உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறது. மேலும் தலைமை ஆசிரியர்களுக்கு Duty Allowance வழங்குமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

9. செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 1-4-58க்குப் பிறகு எந்தத் தேதியில் எந்த வகுப்பைப் போதிக்க நியமனம் செய்யப்பட்டாலும் அவர்களுக்குச் செகண்டரி கிரேடு சம்பள விகிதப்படியே சம்பளம் கொடுக்க உத்தரவாக வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறது.

10. பள்ளி நிர்வாகிகளே மதிய உணவுக் குழுத் தலைவராகவும் இருப்பது அவசியம் என்பதை இம் மாநாடு வற்புறுத்து வதுடன் தற்பொழுது வழங்கப்படும் மதிய உணவு மானயத் தை 6 ந. பையிலிருந்து 12 ந. பையாக உயர்த்திக்கொடுக்க வகை செய்யுமாறும், ஷை மானயம் முன்பணமாகவே வழங்கப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறது.

11. திக்கற்ற மாணவர் இல்லத்தில் அனுதைக் குழந்தை களுக்கு அளிக்கப்படும உதவித்தொகையைப் பிரதி குழந் தைக்கும் ரூபாய் 12 ஆக இருப்பதை விலைவாசி உயர்வை உத்தேசித்து ரூபாய் 20 ஆக உயர்த்திக் கொடுக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறது.

12. உதவி பெறும் பள்ளிகளைக் கல்வி இலாகா அதிகாரிகளன்றி இதர இலாகா அதிகாரிகள் மேற்பார்வை செய்வது, பள்ளி அலுவல்களில் தலையிடுவது போன்றவை, மாணுக்கர்களின் கல்வி அபிவிருத்திக்குப் பாதகம் ஏற்படாமல் இருக்கும் வகையில் இருத்தல் நலம் என்று இம் மாநாடு அபிப் பிராயப் படுகிறது.

13. ஓர் நிர்வாகி தன் பாடசாலையின் அபிவிருத்திக்கு பூரண யோக்யதாம்சம் பெற்ற ஆசிரியர்களையே நியமித்துக்கொள் ளும் அதிகாரத்தில் மாற்றூர்களின் தலையீடு இருத்தல் கூடாது என்று இம்மாநாடு அபிப்பிராயப்படுகிறது.

14. மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஷை கூறிய தீர்மானங் களை அமுலுக்குக் கொண்டுவர அரசியலாரையும், கல்வி இலாகா அதிகாரிகளையும நமது சங்கத் தலைவர் பேட்டி காண்பதற்கும் இதர ஏற்பாடுகளைச் செய்வதற்கும் இம்மா நாடு தன் சம்மதத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது,

A. வேதரத்னம்.

தலைவர்

# எமது புதிய வெளியீடுகள்

(புதிய பாட திட்டப்படி)

ஆறும் வகுப்புக் குரியவை :

## 1. திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

தொகுப்பாசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T. (Dip. in Geog)

கெஜட் பக்கம் 25 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-25

## 2. புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், B. A., L. T.

கெஜட் பக்கம் 28 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-50

## 3. சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேலு, B. A., L. T.

கெஜட் பக்கம் 14 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-75

## 4. பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மி நாராயணசாமி, B. A., L. T.

கெஜட் பக்கம் 30 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-50

## 5. அறிவுச்சுடர்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T. (Dip. in Geog)

கெஜட் பக்கம் 10 தேதி 10-5-'61 : விலை ரூ. 0-62

## 6. Mother India Supplementary Reader

(English Non-detailed)

By Mrs. Lucy Arulraj.

கெஜட் பக்கம் 13 தேதி 10-5-'61 : விலை ரூ. 0-50

பத்தாம் வகுப்புக்குரியவை :

## 1. பொது விஞ்ஞானம்

ஆசியரிர் : K. லக்ஷ்மி நாராயணசாமி, B. A., L. T.

கெஜட் பக்கம் 35 தேதி 10-5-'61 : விலை ரூ. 2-50

## 2. இலக்கணம்-கட்டுரை-மொழிப் பயிற்சி

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

கெஜட் பக்கம் 31 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-50

## அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

('ஆரம்பக்கல்வி' ஆபீஸ்)

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.

தபால் பெட்டி எண் 1818. டெலிபோன் எண் 55844.

உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கு...

## வீரபாண்டியன் தமிழ் வாசகம்

ஆசிரியர் : வித்துவான் வை. சுப்பிரமணியம்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 0 14 0 | 2 | 13–5–'59 |

இந்தப் புத்தகம் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் தபால் செலவு உட்பட 50 ந. பை. M. O. அனுப்பவும்.

## ச மூ க நூ ல்

ஆசிரியர் :

ஆசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 2 0 0 | 3 | 18–5–'60 |
| எட்டாம் வகுப்பு | 2 0 0 | 3 | 18–5–'60 |

இந்த இரண்டு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் தபால் செலவு உட்பட ரூ. 2-00 M. O. அனுப்பவும்.

## புதுமுறை சங்கக் கணிதம்

V. S. லீலா, B. A., B. T.

V. K. சேஷாத்திரி, B. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 1 4 0 | 2 | 30–4–'58 |
| எட்டாம் வகுப்பு | 1 4 0 | 5 | 9–4–'58 |

இந்த இரண்டு புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபால் செலவு உட்பட ரூ. 1-25 M. O. அனுப்பவும்.

## சமூகப் பாடப் பயிற்சி நூல்

| | |
|---|---|
| ஆறும் வகுப்பு | 0 14 0 |
| ஏழாம் வகுப்பு | 0 10 0 |
| எட்டாம் வகுப்பு | 0 10 0 |

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

**94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.**

# பேராசிரியரின் பெருவாழ்வு

## [டாக்டர் மு. வரதராசனார்]

இந்த நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும் தமிழிலக்கிய வரலாற்றிலும் பேராசிரியர் டாக்டர் திரு. ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களின் சீரிய தொண்டு நல்லதோர் இடம் பெறுவதாகும். தமிழ்மொழி இனிமை மிகுந்தது என்பதைத் தமிழரும் தமிழரல்லாத மற்றையோரும் நன்கு உணரச்செய்த புலவர் பெருமகன் அவர். அவர்தம் எழுத்திலே தமிழின் இனிமையும் இலக்கியப் பண்பும் விளங்கின; அவர்தம் பேச்சிலே தமிழின் இனிமையும் ஒருவகைப் பெருமிதமும் விளங்கின. அவர்தம் உரையாடலில் தமிழின் இனிமையும் உள்ளத்தின் குழைவும் விளங்கின. அவர் எழுதிய எழுத்துக்களால், தமிழிலக்கியங்களின் பெருமை பலர்க்கும் விளங்கியது. அவர் ஆற்றிய சொற்பொழிவுகளால், தமிழ் மேடை மெருகும் பண்பாடும் பெற்று உயர்ந்தது. அவர் காட்டிய அன்பாலும் ஆதரவாலும் இளைஞர் பலர் தமிழார்வமும் இலக்கியப் பற்றும் உடையவராய்ப் பயன்பெற்றனர்.

சென்னைப் பல்கலைக் கழகம், அவரை நன்கு பயன்படுத்திக் கொண்டு, அதனால் பெருமையும் பெற்றது. இருபத்தைந்து ஆண்டுகள் அவர் அப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார். அங்குத் தமிழ்ப் பேராசிரியர் பதவி ஏற்பட்டபோது, முதல் முதலில் அதை ஏற்று, அப்பதவிக்கு ஒரு சிறப்பை நல்கியவர் அவரே. சென்னைப் பல்கலைக் கழகம், தன் நூற்றாண்டு விழாவின் போது அதன் பேராசிரியர் ஒருவர்க்கு 'டாக்டர்' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கவேண்டும் என முன் வந்தபோது, பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களே அதற்குத் தகுதி வாய்ந்தவர் என முடிவு செய்து, நூற்றாண்டு விழாவின் போது பலருடைய ஆரவார மகிழ்ச்சிக்கு இடையே அந்தப் பட்டத்தை அவர்க்கு வழங்கியது. பல்கலைக் கழக வரலாற்றில் வெளியார் பலர்க்கு அத்தகைய பட்டங்கள் வழங்கியது உண்டு. பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர் ஒருவர்க்கு அச் சிறப்புச் செய்தது, அதன் வரலாற்றில் ஒரு புதுமையாகும். அதனை ஒட்டிச் சென்னைப் பல்கலைக் கழகம் செய்த மற்றொரு புதுமையும் உண்டு. அறுபது ஆண்டு நிறைந்ததும் பேராசிரியர்கள் பதவியை விட்டு ஓய்வு பெறுவதே பொது விதி. பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் தம் அறுபத்தைந்தாம் வயது வரையில் பதவியில் இருந்து பணிபுரியுமாறு பல்கலைக் கழகம் இடம் தந்தது. இந்தத் தனிச் சலுகை வேறு யார்க்கும் இது வரையில் வாய்த்ததில்லை.

பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களின் சொற்பொழிவு மேடை தனிப் பெருமிதம் வாய்ந்துவிளங்கியதால், ஆங்கிலம் கற்றோர் ஆயிரக்கணக்கானவர்களைத் தமிழ் கவர முடிந்தது. கூட்டத்திற்குக் குறித்த நேரத்திற்கு வருதலும், எடுத்த பொருளை அழகும் இனிமையும் நிரம்பிய முறையில் பேசிக் குறித்த நேரத்தில் முடித்தலும், மற்றொன்று விரித்தலும் வெற்றெனத் தொடுத்தலுமாகிய குற்றங்களுக்கு இடந்தராமல் கேட்போர் உளங்கொளப் பேசி மகிழ்வித்தலுமாகிய சிறப்பியல்புகளால், ஆங்கிலச் சொற்பொழிவாளரும் வியந்து போற்றுமாறு விளங்கினார். சென்னையில் அவர் நடத்திய கம்பராமாயணச் சொற்பொழிவுகளும் சிலப்பதிகாரச் சொற்பொழிவுகளும், ஒரு நல்ல புரட்சியைச் செய்தன என்று கூறலாம். தமிழிலக்கியக் கூட்டம் என்றால் நூறு இருநூறு பேர் வந்து கூடும் நிலையை மாற்றி, ஆயிரம், ஈராயிரம் எனக் கூட்டம் பெருகி வருமாறு செய்த வகையில் வழிகாட்டியாய்த் தொண்டு செய்தார் பேராசிரியர் என்பதில் ஐயமில்லை.

பேராசிரியர் அவர்கள் திருநெல்வேலியில் செயிண்ட் சேவியர் கல்லூரியில் இண்டர்மீடியட் கற்று, பின்னர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் கற்றார். அப்போது பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய திருமணம் செல்வக்கேசவராய முதலியார் அவர்கள் மாணவராகிய இளைஞர் சேதுப்பிள்ளை அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தார்; தமிழார்வம் விதைத்தார். பி. ஏ. படித்து முடிந்த பின், அந்தமாணவரை அழைத்துத் துணையாசிரியராகப் பச்சையப்பன் கல்லூரியிலேயே பணிபுரியுமாறும் செய்தார். அங்குச் சில காலம் தமிழாசிரியராக இருந்த சேதுப்பிள்ளை அவர்கள், சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி. எல். பயின்று பட்டம் பெற்ற பின், திருநெல்வேலிக்குச்சென்று வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். நகராட்சி மன்றத்தில் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொதுத்தொண்டில் ஈடுபட்டார். ஆயினும், தமிழ்த் தொண்டு அவரைத் திரும்பவும் ஈர்த்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அவரை அழைத்தது. அங்கு மாணவருலகம் விரும்பிப்போற்றும் தமிழறிஞராய்த் திகழ்ந்தார். பின்னர், அதை விடுத்துச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வந்து சேர்ந்தார்.

இருபதாம் நூற்றாண்டிற்கு இன்றியமையாதது உரைநடை நூல்களே. அந்த வகையில் நல்ல தொண்டு ஆற்றியது பேராசிரியரின் எழுதுகோல். தமிழ்ப்பாக்களின் சொல்லினிமையையும் கற்பனை இன்பத்தையும் நன்கு துய்த்தவர் பேராசிரியர். அந்தச் சொல்லினிமையும் கற்பனையின் பழும் கலந்த வளமான இலக்கிய நடையே பேராசிரியரின் நடை. செவியின்பத்தை நாடும் நாட்டம்

யிருந்தவர் அவர். ஆதலால், இலக்கியத் தொடர்களை இன்பம் தரும் வகையில கையாண்டு, இனிய நடையில் எழுதியும் பேசியும் சொல்லின் செல்வராய் விளங்கினார் அவர்.

எல்லாவற்றையும் விடச் சிறப்பாகக் குறிக்கத் தகுந்தது, அவருடைய தமிழுள்ளம். தமிழுக்குக் குறை என்றால் அவர் தம் நெஞ்சம் வாடும்; தமிழுக்கு நன்மை என்றால் அவர் தம் முகம் மலரும். தமிழின் வாழ்வே தம் வாழ்வாகக் கொண்டு உணர்ந்த அந்த உள்ளம், தமிழின் புகழை யும் தம் அன்னையின் புகழையும் சேர்த்து வாழ்விக்க விரும்பியது. சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு இருபத்தைந்தாயிரமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு இருபத்தைந்தாயிரமும் தம் அன்னையார் சொர்ணம்பாள் பெயரால் நன்கொடை நல்கி, ஆண்டுதோறும் ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நிகழுமாறு ஏற்பாடு செய்தார். புலவர் பெருமகனார் ஒருவர் புரவலராய் நின்று நன்கொடை வழங்கிய பெருஞ்செயல் இது.

பேராசிரியரின் புகழ், என்றுமுள தென்தமிழ்போல் விளங்கும். அவர் தம் பெருமிதச் சொற்பொழிவுகளையும் நகைச்சுவை ததும்பிய உரையாடல்களையும் இனிக் கேட்டு மகிழ வாய்ப்பு இல்லை. ஆயின், அவர் தம் இன்பத் தமிழ் நூல்கள் வாயிலாக, செந்தமிழ்த் தேனைப் பருகும் வாய்ப்பு எவர்க்கும் என்றும் உண்டு. அவை அவர் தம் புகழ் விளக்குகளாய் ஒளி வீசி விளங்கும்.

"தமிழ் நாடு"

---

## அறிவுச் சுடர்கள்

யார் நம்முடன் போராடுகிறானோ அவன் நம்முடைய நரம்புகளுக்கு முறுக்கேற்றுகிறான்; நம்முடைய திறமையைக் கூர்மைப் படுத்துகிறான். ஆகவே நம்முடைய எதிரியே நமக்கு உதவி செய்பவன்.

—எட்மண்ட் பர்க்

மிக அதிகமான மக்களுக்கு மிக அதிகமான நன்மையைச் செய்வதுதான் அரசாங்கத்தின் கடமை.

பந்தாம்

கற்களால் கட்டப்படும் கோயில்களை விட, நரம்பாலும் தசையாலும் கட்டப்பட்டுள்ள மனித உடல்களே உண்மையான கோயில்கள்.

—காந்தியடிகள்

# ஜப்பான் நாட்டில் குடும்ப நீதி மன்றங்கள்

[வி. ஏ. பாலகிருட்டினன்]

நம் நாட்டில் ஏதாவது ஒரு சிக்கல் சட்டமன்றத்தின் மூலம் தீர்க்கப்பட வேண்டுமானால், அச்சிக்கல் தீர, வாதி, பிரதிவாதி இருவருக்கும் ஏற்படும் கால தாமதம், பண விரயம் இவற்றை நாம் கண்கூடாகப் பார்த்து வருகின்றோம்.

இங்கே நிலைமை இவ்வாறு இருக்க, ஜப்பான் நாட்டில் பொதுவான நீதி மன்றங்கள் மட்டும் அல்லாமல் சாதாரண குடும்பங்களில் ஏற்படும் சிக்கல்களையும் தொல்லைகளையும் போக்கிக் கொள்ளக் குடும்ப நீதி மன்றங்கள் இருக்கின்றன என்பதை அறியும் பொழுது, அத்தகைய நீதி மன்றங்கள் பற்றியும், அவை இயங்கும் முறை பற்றியும் தெரிந்து கொள்ளும் ஆவல் நமக்கு ஏற்படுவதுஇயற்கையேஅல்லவா? மற்ற நாடுகளில் அந்நாட்டு மக்கள் வாழும் குடும்பங்களிலோ, அல்லது அந் நாட்டுச் சிறுர்களிடையேயோ ஏற்படும் சண்டை சச்சரவுகளையும், அவை காரணமாக அவர்கள் நீதிமன்றங்களை நாடிய செய்திகளையும் செய்தித் தாள்கள் வாயிலாக அறிந்து கொள்ளும் வாய்ப்பிருக்கிறது நமக்கு. ஆனால் ஜப்பான் நாட்டில் அத்தகைய குடும்பச் சண்டைகளையும், சிறுர்கள் பற்றிய சிக்கல்களையும் பத்திரிகைகளின் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடியாத வகையில் ஜப்பான் நாட்டுக் குடும்ப நீதி மன்றம் பணி புரிந்து வருகின்றது.

ஜப்பானில் இயங்கி வரும் குடும்ப நீதி மன்றம் அந்நாட்டுக் குடும்பங்களில் ஏற்படும் தொல்லைகளைத் தீர்ப்பதிலும், சிறுர்களின் நல் வாழ்விற்கான வழிவகைகளைக் கையாளுவதிலும் பெரும் பணி புரிந்துவருகிறது.

ஜப்பானின் குடும்ப நீதி மன்றம் இரண்டு வகைகளில் சிறப்பு வாய்ந்ததாகும். ஒன்று அது, மிகவும் குறைந்த செலவில் குடும்பச் சிக்கல்களைத் தீர்த்து வைக்கப் பயன்பட்டு வருகிறது. இரண்டாவதாக அது குடும்பச் சிக்கல்களை உண்மையிலேயே சமரசமாகத் தீர்த்து வைத்து இரு சாராருக்கும் மன நிறைவு ஏற்படச் செய்கிறது. அவ்வாறின்றி சட்ட ரீதியாக, ஒரு சாராருக்கு நியாயம் வழங்கி, மற்றொரு சாராருக்குத் தண்டனை வழங்குவது கிடையாது.

குடும்ப நீதி மன்றத்தில், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர்

வழக்கினை மனு செய்து கொள்ள வேண்டுமானால், ஸ்டாம்பு கட்டணத்திற்கு என 100 யென் (ஜப்பான் நாணயம்) செலவிட வேண்டும். நம் நாட்டு நாணய மதிப்பின் படிக் கணக்கிட்டுப் பார்த்தால் அது ரூ. 1–33 ஆகும். அத்துடன் அஞ்சல் செலவிற்கென 75 யென் கட்ட வேண்டும். தன் கட்சியின் சார்பாகத் திறமை வாய்ந்த சட்ட வல்லுனரை வழக்காடுபவர் நியமிக்க விரும்பினால் குடும்ப நீதி மன்றமே அத்தகைய வல்லுனரை எந்த விதமான கட்டணமுமின்றி ஏற்பாடு செய்துகொள்ள வகைசெய்கிறது. ஜப்பானில் தற்பொழுது இயங்கி வரும் குடும்ப நீதி மன்றமானது 12 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப் பட்டதாகும். இம்மன்றமானது ஏனைய நீதி மன்றங்களைப் போலவே சுப்ரீம் கோர்ட்டின் அதிகாரத்திற்கு உட்பட்டு இயங்கி வருகிறது. குடும்ப நீதி மன்றத்தின் நடுவர்கள் ஜப்பான் நாட்டு அமைச்சரவையினால் நியமிக்கப் படுவர். குடும்ப நீதி மன்றத்தின் நடுவர்களாக இருக்கத் தகுதியுடையவர்கள் பட்டியலை, அவ்வப்பொழுது சுப்ரீம் கோர்ட், அமைச்சர் அவைக்கு அனுப்பி வைக்கும். குடும்ப நீதி மன்ற நடுவரின் பதவிக் காலம் 10 ஆண்டுகளாகும். குடும்பச் சிக்கல்களையும், சிறுர்கள் செய்யும் குற்றங்களையும் செவ்வி தின் தீர்க்கவல்ல திறன் வாய்ந்தவர்களாகவும், பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் நீதித்துறை வல்லுநர்களாக அல்லதுமாவட்ட நீதி மன்றங்களிலோ அல்லது உயர் நீதி மன்றங்களிலோ நடுவர்களாக இருந்தவர்கள் மட்டுமே குடும்ப நீதி மன்ற நடுவர்களாக நியமனம் செய்யப்படுவர்.

ஜப்பான் நாட்டில் குடும்ப நீதி மன்றங்கள் 49 உள்ளன ஒவ்வொரு குடும்ப நீதி மன்றத்திலும் நடுவர்களும், மருத்துவர்களும், ஆலோசகர்களும், இரு சாராருக்கும் சமாதானம் செய்து வைக்கும் ஆணையாளர்களும், இருப்பர். இவர்களில் ஆணையாளர்களின் பணி சிறப்பு வாய்ந்ததாகும் ஆணையாளராக வருவோர் பொது மக்களோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டு, சமூகத் தொண்டு புரிந்து, ஒழுக்கத்திலிருந்து சிறிதும் மாறுதவர்களாக இருப்பவர்கள் ஆவர்.

குடும்ப நீதி மன்றத்தின் சிறப்புகள் பலவாகும். அவற்றில் ஒன்று குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கு எந்த விதமான கட்டணமும் வாங்கிக் கொள்ளாமல் சிறந்த ஆலோசனைகள் கூறுவதாகும்.

குடும்ப நீதி மன்றத்தில் நீதி பெற விழைவோர் தம் மனுக்களை வாய் மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ கொடுக்கலாம். நீதி மன்றத்திற்கு மனு வந்தவுடன், சமாதானம் செய்து வைக்கும் ஆணையாளர்களும், எச்சாராரிடம் நியாயம் உள்ளது என்பதை ஆராயும் குழுவினரும் கூடுவர்.

நடுவர், ஆணையாளர், நியாயம் காணும் குழுவினர், வாதி, பிரதிவாதி, நீதி மன்ற அலுவலர் ஆகியோர் தனியாக ஓர் அறையில் மேஜையைச் சுற்றி அமருவர். வாதி, பிரதிவாதி இவர்களுடைய வாதங்கள் யாவும் இரகசியமாக வைக்கப்படும்.

பெரும்பாலான வழக்குகள், சமாதானம் செய்து வைக்கும் ஆணையாளர்களின் மூலமாகவே தீர்க்கப்பட்டுவிடும். இதற்கான ஆணையாளர்களும், நியாயம் காணும் குழுவினரும் மூன்று முதல் பத்து தடவைகளுக்குள்ளாகவே கூடி, இறுதி முடிவு எடுப்பர். குடும்ப நீதி மன்றத்தின் முடிவு திருப்தியளிக்கவில்லை எனில், உயர் நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

எவருடைய வழக்கில் நியாயம் உண்மையில் உள்ளது என்பதை ஆராய்ந்து அறியும் குழுவில் ஒரு நடுவரும், இரண்டு சமாதானம் செய்து வைக்கும் ஆணையாளரும் இருப்பர். அவர்களில் ஒருவர் பெண்மணியாக இருப்பார்.

இரண்டு சாராருடைய வாதப் பிரதிவாதங்களைக் குழு கேட்ட பின்னர், நிலைமையை முற்றிலும் நடு நிலையாக நின்று ஆராய்ந்து இரண்டு சாரர்ருக்கும் நியாயமான முறையில் சமரசம் செய்து வைக்கும். சமரசம்செய்யப்பட்டவுடன் ஒரு சாரார் மற்றொரு சாராருக்குப் பணம்கொடுக்க வேண்டி இருந்தாலும் சரி, அல்லது சொத்துக்களை மாற்றம் செய்ய வேண்டி இருந்தாலும் சரி, அது உடனடியாகச் செய்து வைக்கப்படும்.

விவாகரத்துத் தொடர்பான சிக்கல்களிலும் குடும்ப நீதி மன்றத்தின் பணிபெரிதும் பயன்பட்டு வருகிறது. விவாகரத்து மனுக்களில் பத்தில் ஒரு பங்கினைக் குடும்ப நீதி மன்றமே சமாதான முறையில் தீர்த்து வைத்து விடுகிறது.

ஜப்பான் நாட்டுத் தலைநகரான டோக்கியோவில் மட்டும் ஆண்டு தோறும் சுமார் 20,000 மக்கள் குடும்ப நீதி மன்றத்தின் மூலம் பயனடைந்துவருகின்றனர்.

ஆண், பெண் இரு பாலரிடையே உள்ள தேவையற்ற ஏற்றத் தாழ்வுகளை முடிந்த வரையில் நீக்கி, ஆண், பெண் இருவரும் சட்டத்தின் முன் சமமே என்ற கொள்கையைச் செயல் படுத்திவரும் இத்தகைய குடும்ப நீதி மன்றங்கள் ஏனைய நாடுகளிலும் தோன்ற வேண்டுவது இன்றியமையாததாகும்.

ஓரங்க நாடகம்.

# செல்லக் குழந்தை

"முத்தமிழ்ப் பித்தன்"

## காட்சி 1

*[காலை நேரம். கருணாகரர் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறார். அப்போது சுந்தரம் வருதல்.]*

**சுந்தரம் :** வணக்கம்.

**கருணாகரர் :** (பத்திரிகையை விலக்கி) யார், சுந்தரமா? வாப்பா, ஏது இவ்வளவு தூரம்? எப்போது வந்தாய்? சௌக்கியம் தானே? இப்படி உட்கார்......யார் அங்கே? முருகா, முருகா, அம்மாவிடம் காப்பி போடச் சொல்லு.

**சுந் :** நேற்று இரவுதான் வந்தேன், ஊரிலிருந்து. மீண்டும் நாளைக் காலையே போகவேண்டும். ரொம்ப நாளாகிறதே—பார்த்து விட்டுப் போகலாமென்று எண்ணி வந்தேன். சௌக்கியம் தானே?

**கரு :** ஏதோ இருக்கிறேன். கிருஷ்ணா, ராமா, கோவிந்தா வென்று காலத்தைத் தள்ளி வருகிறேன்.

**சுந் :** என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? உங்களுக் கென்ன குறைச்சல்? பணத்திற்குக் குறைச்சலா? பாக்கியத்திற்குக் குறைச்சலா? கருணாகரா மில்ஸ் உரிமையாளர். நம்மைப் போலவா?

**கரு :** என்ன இருந்து என்னப்பா லாபம்? மனிதனுக்கு மன அமைதி இருந்தால் தானே?

**சுந் :** பணக்காரர்களே இப்படித்தான். எவ்வளவுதான் பணமிருந் தாலும் திருப்தி என்பதே அவர்கள் அகராதியில் கிடையாது. மேலும் மேலும் பணத்தைச் சேர்ப்பதில்தான் அவர்களுக்கு நாட்டம்.

**கரு :** ஒருவனுக்கு வாழ்க்கையில் பணம் மட்டுமே 'இருந்து விட்டால் போதுமா? மன அமைதியின்றி எத்தனை தான் பணம் படைத்திருந்தாலும் வாழ்க்கை பணப்பதில்லை. காலேஜ்

படிக்கும் நாட்களில் நீ என்னுடனே இருந்ததை மறந்து விட்டாய். இப்போது ஆடிக்கொருதரம், அமாவாசைக்கொரு தரம் தலை காட்டுகிறாய். அதனால்தான் நிலவரம் தெரியாமல் பேசுகின்றாய்.

**சுந்:** விஷயத்தைச் சொல்லுங்கள்.

**கரு:** எனக்கு எல்லாம் இருக்கிறது. வீடு வாசல்; தோட்டம் துறவு, ஒன்றுக்கும் குறைச்சல் இல்லை. அந்தஸ்துக்கு ஏற்றபடி அழகான மனைவி. இவ்வளவும் இருந்தும் கர்மம் யாரையப்பா விட்டது. இத்தனையும் அனுபவிக்கப் பிறந்த...........

**சுந்:** தெஸா, தெஸா...ஒரு குழந்தையில்லையே என்று எண்ணி ஏங்குகின்றீர்கள். அப்படித்தானே.

**கரு:** குழந்தைகூட ஒன்று இருக்கிறது. ஆனால் கடவுள் அதை நொண்டியாகப் படைத்து விட்டார், சுந்தரம், நொண்டியாகப் படைத்து விட்டார்.

[கண்களைத் துடைத்துக் கொள்ளுகிறார். அப்போது முருகன் காப்பி கொண்டுவந்து மேசை மீது வைக்கிறான்.]

**சுந்:** கீழே விழுந்து கால் முறிந்து விட்டதா ? அல்லது பிறப்பே அப்படித்தானா ?

**கரு:** ம். [பெருமூச்சு] பிறப்பே அப்படித்தான் என்றுதான் சொல்ல வேண்டும். சின்ன வயசில் மார்பால் தவழ்வான். ஆனால் அதற்குப் பின் அவன் நடந்ததாக எனக்கு நினைவில்லை. சிரித்தால் கன்னத்தில் குழிவிழும். அதிர்ஷ்டக்காரனாக இருப்பான் என்று எல்லோருமே சொன்னார்கள். எவ்வளவு அன்பாக வளர்த்தோம் தெரியுமா ? ஆசைக்கொரு மகன் என்பதற்காகப் பொன்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்தோம். தரையிலே தவழ விட்டால் எங்கே அவன் உடல் அழுக்கடையுமோ பூச்சிப் புழு கடித்து விடுமோ என்று பயந்து அவனைத் தூக்கி வைத்துக் கொள்வதற்கென்றே ஒரு வேலைக்காரியை அமர்த்தினோம். அவன் ஆ வென்று அழக்கூடாது. அழுதால் அலறிக் கொண்டு வந்துவிடுவாள் அவன் அம்மா. ஆகார விஷயத்தில் மட்டும் அவள் யாரையும் நம்புவதில்லை. தங்கக் கிண்ணியில் பாலும் சோறும் பிசைந்து தன் கையால் தானே ஊட்டுவாள். அவன் நடக்க மாட்டான் என்பது எங்களுக்கு ரொம்ப நாள்வரை தெரியாது. நாலைந்து வயதாகியும் நடவாமல், நடக்கச் சொன்

ஞல் அழுவதையும் கண்ட பின்பே விஷயம் அறிந்து திடுக்கிட்டோம். சரி, காப்பி ஆறிவிடும். எடுத்துச் சாப்பிடு.

சுந் : (காப்பியை உறிஞ்சிய வண்ணம்) யாராவது டாக்டரிடம் காட்டினீர்களா?

கரு : பண்ணுத வைத்தியமில்லே. குழந்தை நடப்பாளு மாட்டாளு என்று புரபஸர் சேதுவைக் கேட்டேன், அவனுடைய ஜாதகத்தைக் காட்டி.

சுந் : ஜாதகத்தைக் காட்டி?

கரு : ஆமாம்.

சுந் : ஓஹோ அவர் என்ன சொன்ஞர்?

கரு : பயப்படும் படியாக ஒன்று மில்லே. எல்லாம் காற்று சேஷ்டைதான். குலிசம் தயாரித்துத் தருகிறேன் அதை அணிவித்தால் எல்லாம் நாளடைவில் சரியாகி விடும் என்ருர். சாதாரணக் குலிசம் ரூ. 100. ஸ்பெஷல் ரூ. 500. ஸ்பெஷல் குலிசமே அற்புதமான சக்தி வாய்ந்தது என்ருர். சரி என்று ஸ்பெஷல் குலிசமே வாங்கிக் கட்டினேன்.

சுந் : பின் என்ன? உங்கள் அந்தஸ்துக்குச் சாதாரண குலிசமா வாங்குவது? உங்களேப் போன்றவர்கள் வாங்குவீர்கள் என்றுதானே ஸ்பெஷல் குலிசமே தயாரிக்கின்ருர்கள். சரி மேலே சொல்லுங்கள்.

கரு : பண்டிதமணி ரங்கநாத சோதிடர் ரொம்ப கெட்டிக்காரர் அவரைக் கேட்பது தானே என்ருர்கள்.

சுந் : சரி அதையும் பார்த்து விடலாமென்று அவரையும் கலந்திருப்பீர்கள். அவர் என்ன சொன்ஞர்?

கரு : குலிசம் கிலிசம் எல்லாம் சுத்தப் பொய். கண்ட கண்ட புரட்டர் பேச்சைக் கேட்டுப் பணத்தைக் கொடுத்து ஏமாறுகிர்கள். குழந்தைக்குச் சனி தோஷம் வேறு ஒன்றும் இல்லே. ஒரு மண்டலம் நவக்கிரகம் சுற்றுங்கள். சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் தடவி, அர்ச்சனை செய்து வந்தால் எப்பேர்ப்பட்ட தோஷமும் நொடிப் பொழுதில் பஞ்சாகப் பறந்து விடும் என்ருர்.

சுந் : பஞ்சாகத்தான் பறந்திருக்கும், பணம். சரி யாராவது டாக்டரிடம் காட்டுவது தானே.

**கரு:** காட்டாமலா இருப்பேன்? வைத்திய ரத்ன வேங்கடரத்தினத்திடம் காட்டினேன். குழந்தையை நன்கு பரிசோதித்து விட்டுச் சிற்சில மூலிகைகள் வைத்துக் கட்டினால் கால் சரியாகி விடும் என்றார். அவை கிடைப்பது மிகவும் கஷ்டம் என்றும் சொன்னார்.

**சுந்:** பலமான அஸ்திவாரம்தான் போட்டிருக்கிறார்.

**கரு:** பணத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். பையன் எழுந்து நடந்தால் அதுவே போதும். எவ்வளவு செலவானாலும் கவலையில்லை யென்றேன். மூன்று நாளைக்கு ஒரு முறை மூலிகைகள் அரைத்துக் கட்டினார். சில மூலிகைகள் இங்கே கிடைக்கவில்லை. வங்காளத்தில் இருக்கும் தம் நண்பர்கள் மூலம் இமய மலையிலிருந்தே கொண்டு வந்து கட்டினார்.

**சுந்:** பணத்தைச் செலவு செய்ய ஆளிருந்தால் கைலாசத்திலிருந்து கூட மூலிகைகள் கொண்டுவந்து கட்டுவார்கள்.

**கரு:** என்ன சிகிச்சை செய்து என்ன பலன்?

**சுந்:** குழந்தை எழுந்து நடக்கவேயில்லையா?

**கரு:** பார் சுந்தரம், விளக்கின் நிழல் விளக்கின் அடியில் தான் தங்கும். யார் யார் என்னென்ன பாவம் செய்தாரோ, அவரவர் வினைப்பயனை அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.

**சுந்:** இதுதான் உங்கள் கடைசி முடிவா? வைத்திய ரத்தினம் இமாலய முயற்சிகூட பலனற்றுப் போய்விட்டதா?

**கரு:** அவர் என்ன செய்வார் பாவம், தான் கற்ற சாஸ்திரத்தையெல்லாம் பிரயோகித்துப் பார்த்தார். ஒன்றும் பிடிபடவில்லை. உடல் நோய்க்கு மனிதன் மருந்து தரலாம்; கர்ம நோய்க்கு யார் மருந்து கொடுத்துக் குணப்படுத்த முடியும்?

**சுந்:** இதுதான் உங்கள் முடிவா?

**கரு:** இது என் முடிவல்ல அப்பா. சாட்க்ஷாத் லோக குரு ராமானுசாச்சாரியார் அவர்களே இப்படிச் சொன்னார்.

**சுந்:** சுவாமிகளின் அருள் வாக்கா?

**கரு:** ஆமாம். ஆயிரம் பொற்காசுகளை அவர் பாதங்களில் கொட்டி என் வீட்டிற்கு எழுந்தருளும்படி வேண்டினேன். ஆச்சார்ய சுவாமிகள் என் அபிலாஷையைப் பூர்த்தி செய்தார். "சுவாமி, என் மகன் இப்படி நொண்டியாக இருக்கிறான். பண்ணாத

வைத்திய மில்லை. ஆஸ்திக்கொரு மகன். அவனுக்காகவே நாங்கள் உயிரோடு இருக்கிறோம். உங்கள் கையால் அவனை ஆசீர்வதிக்கவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். சுவாமிஜி ஒரு கணம் கண்ணை மூடி ஜபித்து விட்டுத் திருநீற்றை எடுத்து அவன் நெற்றியில் பூசி விட்டு, அவன் நொண்டியாக இருப்பதன் காரணத்தை ஞானக்கண் மூலம் அறிந்து சொல்லி விட்டார். அவன் போன ஜன்மத்தில் பூனையின்காலை ஒடித்து விட்டதால் தான் இப்பிறப்பில் நொண்டியாகப் பிறந்திருப்பதாகச் சொன்ஞர்.

**சுந் :** போனவாரம் என்ன சாப்பிட்டோமென்று சொல்ல மாட்டார்.

**கரு :** விதியை நொந்து வாழ்க்கை நடத்துகிறேன்.

**சுந் :** லோக குருவே அப்படிச் சொல்லிவிட்ட பின்பு அதற்குமேல் அப்பீல் ஏது?

**கரு :** அவரவர் தலையெழுத்தை அவரவர் அனுபவித்துத் தாஞக வேண்டும்.

**சுந் :** மிஸ்டர் கருஞகர், எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஆஞல் அதன்படி நீங்கள் நடப்பீர்களோ என்னவோ, சந்தேக மாக இருக்கிறது.

**கரு :** ஏன் தயங்குகின்றுய் சொல்லு.

**சுந் :** டாக்டர் சந்திரனைத் தெரியுமா ?

**கரு :** கேள்விப்பட்டிருக்கின்றேன்.

**சுந் :** அவர் என் நெருங்கிய நண்பர். அவர் வீட்டில்தான் இப் போது நான் தங்கியிருக்கிறேன். நான் அவரிடம் கேஸ் ஹிஸ்ட்ரி விவரமாகச் சொல்லி அவரால் குணப்படுத்த முடியுமா வென்று கேட்கிறேன். முடியுமென்றுல் போன் மூலம் தெரி விக்கின்றேன். அவரால் குணப்படுத்த முடியுமென்று நான் நம்புகிறேன்.

**கரு :** சுந்தரம், எனக்கென்னமோ நம்பிக்கை யேற்படவில்லை. அன் றெழுதியவன் அழித்தா எழுதப்போகிறுன்?

**சுந் :** கருஞகார், நீங்கள் சுத்த பத்தாம் பசலியாகவே இன்னும் இருக்கின்றீர்கள். பிரம்மா கூட மாடர்ஞக ஆகிவிட்டார் கருஞகர். முன்பெல்லாம் இவனுக்குக் கட்டைவண்டியில் போகும் போது மரணம், இவனுக்குப் பல்லக்கில் போகும்

[30-ம் பக்கம் பார்க்க]

# மிளகால் வளர்ந்த நிலையான நல்லுறவு

[ஜான் டி. ரீடு]

அமெரிக்காவில் மாஸசூசெட்ஸ் மாநிலத்தில் சேலம் என்னும் நகர் ஒன்று உள்ளது. 1812-ம் ஆண்டுத் தொடக்கத்தில் அங்கிருந்து வணிகக் கப்பல் ஒன்று கல்கத்தாவுக்குப் புறப்பட்டது. இந்தியாவில் சரக்கு வாங்கக் கப்பல் தலைவரிடம் இரண்டாயிரம் வெள்ளி டாலர் இருந்தது. தங்கள் குடும்பங்களுக்கும் நண்பர்களுக்கும் குறிப்பிட்ட பொருள்களை வாங்கிக் கொண்டு வருவதற்காகவும் பலர் பணம் கொடுத்திருந்தார்கள். சிலர் கழுத்தில் அணியும் சங்கிலியும், சிலர் மஸ்லினும், சிலர் இஞ்சி ஊறுகாயும் வாங்கி வருமாறு கேட்டுக் கொண்டனர். ஹென்ரி பிக்கரிங் என்பவர் "சமஸ்கிருத வேதம்" வேண்டும் என்றார். வேற்று நாட்டினராகிய அவர் ஹிந்து வேதம் வேண்டும் என்று ஏன் கேட்டார்? அதை வைத்து அவர் என்ன செய்தார்? என்று நாம் வியப்போடு கேட்கக் கூடும்.

கப்பல்பிரயாணத்தில் தொல்லை விளைந்தது. பயங்கரமான சூறாவளி அடித்ததால் கப்பல் ஹூக்ளி நதியின் முகத்துவாரத்தில் பெரும் மணல் குவியலை அணுகியது. எனினும் சேதமின்றித் தப்பி அது கரையைச் சேர்ந்தது. அமெரிக்காவுக்குத் திரும்பும்போது, ஆங்கிலேயர் கப்பலைக் கைப்பற்றினர். (1812-ல் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் போர் நடந்தது) தைரியம் மிகுந்த ஒரு கேப்டன் கப்பலை மீட்டு சேலம் கொணர்ந்து சேர்த்தார். இது வரலாறு கூறும் ஒரு செய்தி.

சேலத்துக்கும் இந்தியத் துறைமுகங்களுக்கும், முக்கியமாகக் கல்கத்தாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே 1787-ம் ஆண்டு முதல் 1845-ம் ஆண்டு வரை போய் வந்து கொண்டிருந்த நூற்றுக்கணக்கான வர்த்தகக் கப்பல்களில் இது ஒன்று. 1815 முதல் 1837 வரை "ஜார்ஜ்" என்னும் பெயருள்ள கப்பல் ஒன்று அமெரிக்காவிலிருந்து கல்கத்தாவுக்கும் கல்கத்தாவிலிருந்து அமெரிக்காவுக்கும் 21 தடவை போய் வந்திருக்கிறது. சாமுவேல் ஷா, பெஞ்சமின் ஜாய் என்னும் அமெரிக்கர் இருவர் வர்த்தகம் செய்யும்பொருட்டுக் கல்கத்தாவில் குடியேறினர். சேலத்தைச் சேர்ந்த தாமஸ் லெக்மன் பம்பாய் நகர ஆல்டர்மேன் ஆனார்.

ஒயின் முதலிய பல்வகைப் பொருள்களை அமெரிக்கக் கப்பல்கள் இந்தியாவுக்கு ஏற்றிக் கொண்டு வந்தன. இந்தியாவிலிருந்து சர்க்கரை, இஞ்சி, சாயம், கோணிப் பைகள், பட்டு

வகைகள், பருத்தித் துணிகள், மிளகு முதலியவை ஏற்றிச் சென்றன. ஒரு காலத்தில் மிளகுக்கு உலகப் பண்டக சாலையாக சேலெம் விளங்கியது. அத்துறை முகத்தில் 1805-ம் ஆண்டில் $7\frac{1}{2}$ மில்லியன் ராத்தல் மிளகு இறக்குமதியாயிற்று. இக்காலத்திலும் [illegible] மாக இறக்குமதி செய்யும் நாடு அமெரிக்காவே. 1959–ல் 5,000 டன்னுக்கும் அதிகமாக இந்திய மிளகு அமெரிக்காவில் இறக்குமதியாகியிருக்கிறது. அது இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மிளகில் மூன்றில் ஒரு பங்கு.

சேலெம் அமெரிக்காவின் மிகப் பழைய நகரங்களில் ஒன்று. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரம் அது. அங்குள்ள பீபடி அரும் பொருட் களஞ்சியத்தில் ஆரம்பக் கால அமெரிக்க வாழ்க்கைபற்றிய அரும் பொருட்கள் உள்ளன. அவற்றில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நடைபெற்ற வர்த்தகம் பற்றித் தெரிவிக்கும் பொருட்களையும் காணலாம். நாவலாசிரியராகிய நத்தானியல் ஹதார்ன் சேலெத்தில் பிறந்தவர்; பல ஆண்டுகள் அத் துறைமுகத்தில் சுங்க வரி அதிகாரியாக வேலை பார்த்தவர்.

சுமார் 1840-ம் ஆண்டுக்குப் பின் இந்திய வர்த்தகத்தில் சேலெம் முக்கியமாக விளங்கவில்லை. அதற்கு 15 மைலுக்குத் தெற்கேயுள்ள பாஸ்டன் முதன்மை பெற்றது. 1833-ல் பாஸ்டனிலிருந்து கல்கத்தாவுக்குக் கப்பல்களில் பனிக்கட்டி வரத் தொடங்கி அந்த ஆண்டில் டஸ்கானி என்னும் கப்பல் 108 டன் பனிக்கட்டியைக் கல்கத்தா கொணர்ந்து சேர்த்தது. வெப்பமான இடங்கள் வழியே அக் கப்[illegible],000 மைல் வந்தும் பனிக்கட்டி உருகவில்லை. மணம் பொருந்திய பைன்மரத் தூளில் அது வைக்கப்பட்டிருந்தது. அவற்றை அடைத்திருந்த பெட்டிகளுக்கு இரண்டு மூடி போட்டிருந்தது. அந்தப் பகுதி எப்பொழுதும் மூடப்பட்டிருந்தது.

கல்கத்தா மக்கள் பனிக்கட்டியை வாங்கி மகிழ்ந்தார்கள். பனிக்கட்டி எப்படி வளர்கிறது என்று அவர்கள் கேட்டார்கள். இந்த வர்த்தகம் பல்லாண்டுகளாக நடந்து கொண்டிருந்தது. ஹென்ரி தோரா "வால்டன்" என்னும் நூலில் வால்டன் குளத்துப் பனிக்கட்டி இந்தியாவில் பயன்படுத்தப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். பகவத் கீதையின் சிறந்த தத்துவக் கடலில் தாம் குளிப்பதாகவும், வால்டன் தண்ணீர் கங்கை நீரில் கலப்பதாகவும் அவர் எழுதியிருக்கிறார்.

இந்தியாவோடு வர்த்தகம்செய்த பாஸ்டன் வியாபாரிகள் செல்வமும் சிறப்பும் பெற்றார்கள். இந்தியப் பொருள் இறக்குமதி ஏற்றுமதியாகும் துறைமுகப் பகுதியில் ஒரு அலுவலகம் இருப்பதே

வியாபாரிகளுக்குத் தனிப் பெருமை தருவதாக இருந்தது. இந்தியா போய்வந்த கேப்டன்களுக்கும் மதிப்பு இருந்தது.

கல்கத்தாவில் அமெரிக்க கேப்டன்கள் வங்காள வியாபாரி ராம்துலால்டே என்பவரின் வணிக நிலையத்துக்குப் போவது வழக்கம். தமது முயற்சியால் முன்னுக்கு வந்தவர் அவர். அவரது தந்தையார் ஒரு ஏழை உபாத்தியாயர். ராம்துலால் அனாதையானார். யாசகம் செய்துபிழைத்த அவரது தாத்தா அவரை வளர்த்தார். எனினும், ராம்துலால் மதிப்புமிக்க பெருஞ் செல்வராகி விட்டார். அவர் ஒழுக்கமுள்ளவராக விளங்கினார். உண்மை, நேர்மை, ஈகை முதலிய குணங்கள் அவருக்கு இருந்தன. அமெரிக்கர் அவற்றை அறிந்து மதித்து மகிழ்ந்தனர்.

அமெரிக்கர் இந்தியாவோடு வியாபாரம் செய்வதற்கு வழி வகுத்தவர் அவர். அமெரிக்க கேப்டன்களுக்கு அவர் கடன் கொடுத்து, நல்ல பொருள்களாகப் பார்த்து வாங்க உதவி செய்தார்.

பாஸ்டன், நியூ யார்க் முதலிய இடங்களிலுள்ள முப்பத்தைந்து அமெரிக்க வியாபாரிகள் நிதி திரட்டி, கில்பர்ட் ஸ்டுவர்ட் எழுதிய ஜார்ஜ் வாஷிங்டன் ஓவியம் ஒன்றை, தங்கள் நன்றிக்கு அடையாளமாக 1801-ம் ராம்துலாலுக்கு வழங்கினார்கள். ஒன்றுக்கொன்று தூரத்திலுள்ள இரு நாடுகளின் நெருங்கிய உறவுகளின் சின்னமாகவும் அதை அவருக்கு அவர்கள் அளித்தார்கள்.

ராம்துலாலின் வழியில் வந்தவர்கள் சென்ற நூற்றாண்டில் அந்த ஓவியத்தை விற்று விட்டார்கள். எனினும், அது இப்பொழுது கல்கத்தாவில் திரு. எச். ஸி. மாலிக் என்பவரிடம் நல்ல நிலைமையில் உள்ளது.

---

[27-ம் பக்கத் தொடர்ச்சி]

போது பாதை சரிந்து பள்ளத்தில் விழுந்து மரணம் என்று எழுதினாராம். ஆனால் இப்போது ஏரோப்பிளேன் பற்றி எரிந்து மரணம், அரியலூரில் ரயில் கவிழ்ந்து மரணம் என்று எழுதிவருகிறாராம் அந்தத் தலை எழுத்தாளர். சரி, நேரம் ஆகிவிட்டது. நான் போய் போன் செய்கிறேன். விடைபெற்றுக் கொள்ளுகிறேன். வரட்டுமா? வணக்கம்.

**கு:** வணக்கம்.

[அடுத்த இதழில் முடியும்.]

# இலண்டன் பல்கலைக் கழகம்

[ஸ்ட்ரேங் பிரபு]

இலண்டனில் 130 ஆண்டுகளுக்கு முன்புதான் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. ஆயினும், இலண்டன் பல்கலைக் கழகம், உலகப் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களுக்கு ஈடாக, ஆதிக்கப் பரப்பிலும், போதனைத் துறையிலும் மாணவர் எண்ணிக்கையிலும் சிறப்புற்று விளங்குகிறது.

இலண்டன் பல்கலைக் கழகத்தின் கேந்திரப் பகுதி, பிரிட்டிஷ் மியூஸியத்திற்கு வடபுறத்திலுள்ள புளூம்ஸ்பரியில் இருக்கிறது. இங்கு ஸெனெட் ஹவுஸ், பல்கலைக்கழக நூலகம், மாணவர் சங்கம், பிர்க்பெக் கல்லூரி, பல்கலைக் கழகக் கல்லூரி, நிர்வாக அலுவலகம் ஆகியவை இருக்கின்றன. பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கிங்ஸ்காலேஜும், 'லண்டன் ஸ்கூல் ஆவ் எகனமிக்ஸ் அன்டு பொலிடிகல் ஸயன்ஸ்' என்ற கல்வி நிலையமும், நகர மத்தியில், ஸ்ட்ராண்டு வீதியின் இருமருங்கிலும் இருக்கின்றன. இலண்டனிலும் சுற்றுப்புற மாவட்டங்களிலுமுள்ள கல்வி நிலையங்கள், இலண்டன் பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயலாற்றுகின்றன.

இலண்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கல்வி நிலையங்களில் தொன்மையும் பெரிதுமான பல்கலைக்கழகக் கல்லூரி, மாணவர் எண்ணிக்கையிலும் போதனைத் துறையிலும் தனியொரு பல்கலைக் கழகத்திற்கு ஈடானது. அங்கு 3500 மாணவர்கள் பயிலுகிறார்கள். கலை, விஞ்ஞானம், சட்டம், பொறியியல், மருத்துவம், நுண் கலைகள் எனப் பல துறைகள் கற்பிக்கப்படுகின்றன. பிர்க்பெக் கல்லூரியில் பட்டப் படிப்புக்கான பகுதிநேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இலண்டன் பல்கலைக் கழகத்துடன் பன்னிரண்டு வைத்தியக் கல்லூரிகளும் ஆராய்ச்சிக் கழகங்களும் இம்பீரியல் விஞ்ஞானத் தொழிலியல் கல்லூரி போன்ற சிறப்புத்துறைக் கல்வி நிலையங்களும் இணைந்திருக்கின்றன. பல்கலைக்கழக கேந்திரப் பகுதியில் கீழ்த்திசை—ஆப்பிரிக்கக் கலைகள் பள்ளியும், கோர்ட்டால்டு-லார்பர்க் ஆராய்ச்சிக் கழகங்களும் இருக்கின்றன. இலண்டன் பல்கலைக் கழகத்தில் சுமார் 20,000 மாணவர்கள் பயிலுகிறார்கள். இவர்களில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு மாணவர்கள் வைத்தியத் துறையில் பயிலும் மாணவர்கள். இந்தப் பல்கலைக் கழகத்தில் சுமார் 5000 பெண்கள் பயிலுகிறார்கள்.

இலண்டன் பல்கலைக் கழகத்திற்கும் மற்ற பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களுக்கும் வித்தியாசம் உண்டு. இலண்டன் பல்கலைக்

கழகத்தில் அமைதியான சூழ்நிலையில்லை. மாணவர்கள் ஒன்றாகப் பழகி வாழும் நிலையுமில்லை. அங்கு கேம்பிரிட்ஜ் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகங்களில் இருப்பது போல போதனைமுறையும், ஆசிரியர்-மாணவர் உறவும் இல்லை. மாணவர்கள், எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, சுதந்திரமாகப் பயிலுகிறார்கள்.

இலண்டன் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மற்றப் பல்கலைக் கழக மாணவர்களுக்குக் கிடைக்காத சில வாய்ப்புக்கள் உண்டு. அரசியல் விஞ்ஞானம் பயிலும் மாணவன் பாராளுமன்ற நடவடிக்கைகளை நேரில் கவனிப்பதன் மூலம் தன் அறிவை விரிவுபடுத்திக்கொள்ள முடியும். இலண்டன் நகர வாணிப நிலையங்கள், பாங்குகள், கடல் வாணிப நிறுவனங்கள் முதலியவற்றைக் கவனிப்பதால், பொருளாதாரம்-நிதித்துறை ஆராய்ச்சியிலீடுபடும் மாணவன் பயனடைய முடியும். சட்டத்துறை மாணவன் பயனடைய நீதிமன்றங்கள் உண்டு. கலைநுட்ப மாணவன் நன்மைபெற அரும்பொருள் களஞ்சியங்களும் கலைக்கூடங்களும் உண்டு. இலக்கியத்துறை மாணவன் வளம்பெற பலப்பல இலக்கியச் சங்கங்களும் தத்துவச் சபைகளும் உண்டு. இசை, நாடகம், பொதுவியல் என எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அது அதற்கென சங்கங்களும் நிறுவனங்களும் இருப்பதால் அவற்றின் உதவியால் ஆய்வுள்ளம் படைத்த மாணவன், தன்னுடைய அறிவை வளர்த்துக்கொள்ள முடியும்.

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஸ்காட்டிஷ் கவி வில்லியம் என்பார், நகரங்களில் சிறந்த நகரம் என்று இலண்டன் நகரத்தை வருணித்தார். பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த டாக்டர் ஜான்ஸன், இலண்டனைப்பற்றிப் பின்வருமாறு கூறினார்: “இலண்டனில் வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தும் கிடைக்கின்றன. ஒரு மனிதனுக்கு இலண்டன் வாழ்க்கை கசந்துவிட்டால், அவனுக்கு வாழ்க்கையே கசந்துவிடும்.”

இந்த இருபதாம் நூற்றாண்டிலும் லண்டன் நகரத்தில் அன்று போல வாழ்க்கைக்கு மகிழ்வூட்டும் சூழ்நிலையிருப்பதால் பல்கலைக் கழகம், கால மாறுதலை அனுசரித்து ஜீவகளையுடன் விளங்குகிறது.

# அத்திப்பழம்

(ச. கு. கணபதி அய்யர்)

இந்தியாவில் அத்திமரத்தில் சுமார் 55 வகைகள் இருக்கின்றன என்று ராக்ஸ்பர்க் என்பவர் கூறுகிறார். தமிழ் நாட்டில் உத்தேசமாகப் பதினைந்து வகைகளுக்குமேல் உள்ளன. நம் நாட்டு அத்தியினம் நாட்டு அத்தி என்றும், கடைகளில் விற்கப்படும் பழம் சீமை அத்தி என்றும் பெயர் பெறும். இந்தக்கட்டுரையில் கூறுவனவெல்லாம் சீமை அத்தியைப் பற்றிய செய்திகளேயாகும்.

## தாயகம்

அத்திக்குத் தாயகம் இந்தியாவுக்கு மேற்கே உள்ள நாடுகளும் அராபியாவின் தென்பாகமும் மத்திய தரைக் கடலைச் சார்ந்த பிரதேசமுமே என்பர். மிகப் பழங்காலப் பழங்களுள் அத்தியும் ஒன்று. இக் காலத்தில் அத்திப் பழம் அதிகக் குளிர்ப் பிரதேசம், அதிக உஷ்ணப் பிரதேசம், ஒழிந்த மற்ற இடங்களில் பரவியுள்ளது. அத்தி அதன் தாயகத்திலிருந்து அமெரிக்காவுக்கும் எடுத்துச்செல்லப்பட்டது. இன்று அந்த நாட்டில் இது சிறந்த முறையில் பயிராகி வருகிறது.

இந்தியாவில் வடமேற்கு எல்லை மாகாணப் பிரதேசத்திலும் பெலுசிஸ்தானிலும் உயர்ந்த அத்திப் பழம் பயிராகிறது. சாதாரணமான பழம் வங்காளம், பம்பாய், பஞ்சாப் முதலிய இடங்களிலும் காணப்படுகிறது. தென்னிந்தியாவில் அனந்தபுரம், பல்லாரி, கடப்பை கர்னூல் ஜில்லாக்களில் விசேஷம்.

## சத்துப் பொருள்கள்

அத்திப் பழத்தின் சத்துக்களின் அளவு தேசத்துக்குத் தேசம் வேறுபடக் கூடும். பொதுவாக அதில் கீழ்வரும் விகிதத்தில் சத்துக்கள் அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| கனப் பொருள்களின் மொத்தம் | 20. 1 | சதவீதம் |
| சர்க்கரைகள் | 15. 5 | ,, |
| ஊன் பொருள் | 1. 3 | ,, |
| சாம்பல் | 0. 6 | ,, |
| மொத்தம் | 37. 5 | ,, |

எஞ்சிய 63. 5 சதவீதம் ஜலம் முதலிய சத்தற்ற பொருள்களாகும். க்ரேப் சர்க்கரை (Grape Sugar) என்ற சத்து இதில் மிகுதியாக இருக்கிறதென்றும், சம தாதுவை உடலுக்குத் தருவதில் இந்தப் பழம் சிறந்ததென்றும் அறிஞர் கூறுவர்.

## தென்னாட்டில் இது பரவ யோசனை

இத்தகைய பழம் நம் தென்னாட்டில் அதிகமாகப் பரவ

வில்லை. போதுமான பிரசாரம் இன்னும் ஏற்படவில்லை. அது தான் காரணம். பயிர் செய்ய விரும்பும் சிலருக்குச் செடிகள் கிடைப்பதில்லை. நல்ல பழ வர்க்கங்களில் சேர்ந்ததாக இருப்பதனால் நாம் இதைத் தென்னாட்டில் விருத்தி செய்தல் வேண்டும். 'தென்னாட்டின் சீதோஷ்ணம் இதற்கு ஏற்புடையதாக அமைந்திருக்கவில்லை' என்று பலர் கூறுவர். நாட்டு அத்தி எங்கெங்கே பயிராகிறதோ, அந்த இடங்களில் சீமை அத்தியை நாட்டு அத்தியோடு ஒட்டுச் சேர்த்து விருத்தி செய்யலாம். நாட்டு அத்தியில் கறிக்குக் காய்களைத் தரும் ஓர் இனம் இருக்கிறது. அதனுடன் சீமை அத்தியை ஒட்டுச் சேர்த்தால் சிறப்புடையதாகும். பாலைக் கன்றுகளுடனும் ஒட்டுச் சேர்த்து வளர்ச்சி முறையைச் சோதிக்க வேண்டும். சபோட்டாவானது இலுப்பை இனத்ததாயினும் பாலையுடன் ஒட்டுச் சேர்வதைப் பார்க்கிறோம்.

## வகைகள்

சீமை அத்தியில் பலவகை உண்டு. பெயர் நமக்குப் புதியவை. வகைகளுக்குள் அமைந்துள்ள வேறுபாட்டை நாம் எளிதில் உணர்ந்து கொள்ளுதல் தொடக்கத்தில் கஷ்டமே. மாம்பழத்தில் பல வகைகளின் வேறுபாடுகளை நாம் நீண்ட பழக்கத்தினால் தெரிந்துகொண்டுள்ளோம். பலவகை அத்திகளை ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது வேறுபாடு எளிதில் புலனாகும். நெல் ஜாதியில் எத்தனை வகை உள்ளன! சாதாரண மக்கள் அவற்றின் பேதத்தை அறியார்; ஆனால் குடியானவர்கள் எளிதில் அறிந்து, 'இது இன்ன வகையது' என்று சொல்லுகிறார்கள் அல்லவா?

இஸ்கியா, கருஞ்சிவப்பு, டர்க்கி என்பன சில விசித்திர வகைகள். இவை பிளாஸ்டோபேகா என்ற பூச்சிகளினால் கருக்கொண்டு காய்க்கின்றன. தென்னாட்டுக்கு இந்த வகைகள் உதவா. இங்கே பயிராகத் தக்கவை. 'மார்ஸேல்ஸ்,' 'டவுன்ஹாம்' 'ராக்ஸ்பர்க்கி', 'புனா' 'பெனுகொண்டா' என்பவையாகும். இவைகளுள்ளும் புனா, பெனுகொண்டா, மார்ஸேல்ஸ், வகைகள் மழை குறைவாக உள்ள பிரதேசங்களுக்கும், ராக்ஸ்பர்க்கி சராசரி 50 அங்குல மழையுள்ள பிரதேசங்களுக்கும் டவுன்ஹாம் மலை நாடுகளுக்கும் ஏற்றவை. மழை குறைவான இடத்தில் வளரும் மார்ஸேல்ஸ், மலைப் பிரதேசத்திலும் நன்றாக வளருகிறது.

சீமை அத்திக்கு அதிக உஷ்ணப் பிரதேசம் ஏற்றதன்று. நம் தென்னாடு இந்தப் பிரதேசத்தைச் சார்ந்ததே. அதனால் தான் நாட்டு அத்தியோடு சேர்க்க வேண்டும் என்று முன்பு வற்புறுத்தப்பட்டது. உஷ்ணம்

மட்டாக இருக்கும் இடங்களிலும் ஆகாயம் பிசிபிசிப்பாக இல்லாமல் வறண்டிருக்க வேண்டும். இரண்டு பருவ மழையும் உள்ள இடம் மித உஷ்ணப் பிரதேசத்தோடு ஏறத்தாழ ஒத்ததாக இல்லையேல் அத்திக்கு ஏற்றதாகாது. பழுக்கும் தருணத்தில் நமக்குமழைகாலமாக இருக்கிறது மழையினால் பழங்கள் கடினமாகவும் சிறியனவாகவும் மாறிவிடுகின்றன ; பலனும் மட்டுப்பட்டு வருகிறது.

இதற்குக் களிமண் நிலம் ஏற்றதன்று. மணல் கலப்பு மண்ணே மேலானது. சத்துப் பொருள் மண்ணில் அதிகமாக இல்லாமையே சிறப்பாகும். அடி மண்ணில் நீர் தங்குதல் கூடாது. செவ்வல், கருமண் பூமிகள் ஏற்றவை. நம் நாட்டில் கோயம்புத்தூர், ஹோசூர், கிருஷ்ணகிரி தர்மபுரி, கோடைக்கானலை அடுத்த இடங்கள், மைக்கேல் பாளையம், சேர்வராயன், நீலகிரி முதலிய இடங்களில் இது நன்றாக வளரும். மற்ற இடங்களில் சிலர் எதிர்பார்க்கும் அளவு மோசமாகப் போகாது.

## இனப் பெருக்க முறை

அத்தியை விதைகள் மூலமாகவும் பதிய முறை, கொம்பு-நடவு முறை, ஒட்டு முறைகளாலும் வளர்த்தல் கூடும்.

## கொம்பு நடவுமுறை

எங்கும் பெரு வழக்காக இருப்பது கொம்பு நடவு முறைதான். 12 அல்லது 15 மாத வளர்ச்சியுள்ள கொம்பில் சுமார் 15 இலைக் கணுக்கள் அமையுமாறு 9 அல்லது 10 அங்குல நீளத்தில் கொம்பை வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். அதனை நிலத்தில் அது வளர வேண்டிய இடத்திலேயே நடுவது ஒருமுறை; சட்டியில் வளர்த்துப் பிறகு உரிய இடத்தில் நடுவது மற்றொரு முறை. மணலும், மக்கிய தழை உரமும் கலந்த மண்ணில் மூன்று கணுக்கள் மண்ணில் புதையுமாறு நட வேண்டும். ஒரு மாதம் இதற்கு நிழல் அவசியம். பாத்தியில் ஈரம் இருந்து வருதல் இன்றியமையாதது. நட்ட பத்து நாளில் வேர்கள் தோன்றும். 15 நாளில் புதிய தளிர்கள் புறப்படும். 3 மாதத்தில் கன்றைப் பெயர்த்து எடுத்துச் சென்று உரிய இடத்தில் நட்டுவிடலாம்.

## ஒட்டு முறை

நாட்டு அத்தியை ஒட்டுச் சேர்க்க வேண்டுமானால் ஒரு வருஷ நாட்டு அத்திக் கன்றைச் சட்டியில் வளர்த்து அதனைச் சீமை அத்தியுடன் நெருக்கொட்டு (grafting by approach) சேர்க்க வேண்டும். அத்தி மரத்தில் ஒட்டுச் சேர்ப்பதற்காக அறுக்கும் பாகம் சில நாளில் இறுகும்போது தோல் சுருங்கிச் சந்துகள் தோன்றுதல் இயல்பு. சந்துகள் தோன்றினால் ஒட்டுப் பலிதமாகாது. அதனால் ஒட்டுச் சேர்த்தவுடன்

ஒட்டு மெழுகைப் (grafting wax) போட்டுச் சந்தில்லாமல் ஒட்டுச் சேர்க்துள்ள பாகத்தை மூடி விடுதல் முக்கியம். ஒட்டுச் செடி 3 மாதத்தில் தயாராதல் கூடும்.

அத்திமரம் வளரவேண்டிய இடத்தில் 3 அடி சதுரத்தில் அவ்வளவே ஆழமுள்ள குழி பறிக்க வேண்டும். அதில் சில எலும்புத்து ணுக்குகள், மட்கிய தொழு உரம், மணல் இவற்றைக் கலந்து வைக்கவேண்டும். ஒரு குழிக்கும் மற்றொன்றுக்கும் இடையிலுள்ள தூரம் 10 அடி முதல் 20 அடி வரையில் வேறு படலாம். அத்தியை மரமாகவும் மாதுளையைப் போல் பெரிய புதற் செடியாகவும் வளர்த்தல் கூடும். முன்னதற்கு 15 முதல் 20 அடி இடைவெளியும், பின்னதற்கு 10 முதல் 12 அடி இடைவெளியும் அவசியம்.

சிறு செடி காற்றில் விழுந்து விடாதபடி ஒரு கோலை அதற்குப் பற்றுக்கோடாகக் கருதல் அவசியம். உரிய இடத்தில் நட்ட ஓர் ஆண்டில் செடி பலன் தரத் தொடங்கும்.

சுவர் ஓரங்களிலேயும் கட்டிடத்தின் தென் புறத்தில் மற்ற மூன்று புறங்களும் மறைப்பாக இருக்கும் பாகத்திலும் நடப்பட்ட அத்தி மிகுதியான பலன் தருதல் கூடுமென்று மேல்நாட்டுத் தோட்டக்கலை நிபுணர்கள் கூறுகிறார்கள். நாம் இதனைச் சோதனை செய்து பார்க்கவேண்டும். மரம் கட்டிடத்தையோ, ஒரு சுவரையோ சார்ந்திருக்க வேண்டும் என்பதில்லை; வேர்ப் பரப்பு அதிக தூரம் பரவாமல் தடை செய்யப்படில் அது செழித்து வளர்ந்து நல்ல பலன் தரக் கூடுமென்று நாம் ஊகிக்கலாம். வேர்களை மிகுதியாகப் படரவிடாமல் தடை செய்யவே சுவர் ஓரங்களில் நடுதலை அவர்கள் சிபார்சு செய்தார்கள் போலும்.

## வளர்ப்பு முறை

அத்தி மிகை நீரினால் பாதிக்கப் படும். அதனால் நிதானமாகவே ஜலம் பாய்ச்ச வேண்டும். ஆணி வேர் ஆழத்திற் சென்றிருந்தாலும் பக்க வேர்கள் மேலாகவே படர்ந்திருக்கும். இந்தப் பக்க வேர்கள் மூலமாகவே அத்தி ஆகாரத்தை உட்கொள்ளுகிறது. அதனால் இதனை மேல் மண்ணில் உணவு கொள்ளும் செடியாக (surface feeder) மதிக்கவேண்டும். எருவை வேர்ப் பரப்பில் 5 அல்லது 6 அங்குல ஆழத்தில் போடுவது போதும். மரம் காய்க்கத் தொடங்கும் சமயத்தில் நீர் எரு அதற்கு அவசியமாகலாம். பழத்தில் சாம்பல் கலந்திருப்பதனால் இம்மரத்துக்கு மரச் சாம்பலை எருவாக அவசியம் சேர்க்கவேண்டும்.

மேல் நாடுகளிலும் இந்தியாவுக்கு மேற்கே உள்ள இடங்களிலும் இந்த மரத்துக்குக் கத்தரிப்பு நல்ல பலனைத் தரக் கூடியதாக இருக்கிறது. ஓராண்டு

கப்புக்களிலேயே காய்கள் தோன்றுகின்றன. அதனால் பழைய கப்புகளைக் களைந்துவிடலாம் என்கிறார்கள். பல கிளைகளைக் களைந்துவிடுகிறார்கள். வேர்களை அதிகமாக வளரவிடாமல் களைவதும் அந்நாடுகளின் வழக்கமாக உள்ளது. நம் நாட்டுக்கு இவற்றுள் ஒன்றும் தேவையில்லை. மரம் காய்க்கவில்லை என்று தோன்றினால் பிப்ரவரி மாதம் முதல் மார்ச்சுக்குள் வாடையளிப்பைத் தரவேண்டும். இதனால் மரத்தின் மதம் நீங்கி அது பழுக்கத் தொடங்குதல் இயல்பு.

பழுத்த பழம் தானாக மரத்திலிருந்து கீழே விழுந்துவிடும். தரை கரடு முரடாக இருந்தால் விழும்போது பழம் சேதமாதல் கூடும். ஆகவே தரை மிருதுவாக இருக்கும்படி செய்து வைக்கவேண்டும். பழங்களை விழும் தருணமறிந்து அதற்கு 3 4 நாள் முன்னதாகப் பறித்துக் கொள்வதும் நல்லதே.

மரம் வருஷத்தில் இரண்டு பட்டம் பழுக்கலாம். 3 பட்டம் பலன் தரும் வகையும் உண்டு. முதல் மூன்று வருஷத்தில் சொற்பப் பலனும் அந்தக் கால வரையறைக்குப் பின் மிகுதியான பலனும் ஏற்படும். ஒரு மரத்தில் ஒரு வருஷத்தில் 6 முதல் 8 வீசை பழம் பறிக்கலாம்.

அத்திப் பழத்தை வற்றலாக்கி நீண்ட காலம் சேமித்து வைக்கலாம். வற்றற் பழங்களும் (Dried fruits) அன்று பறித்தவை போலச் சிறந்தவைகளே. கீழே உதிர்ந்த பழங்களை உப்பும் சுண்ணாம்பும் கலந்த நீரில் கழுவி எடுத்தால் பழத்தின் மேலுள்ள மயிர்க் கால்கள் நீங்கிவிடும். தோல் மிருதுவாதலோடு பழத்தின் நிறமும் கவர்ச்சியைப் பெறுகிறது. இப்படித் தயாரான பழங்களை வெளியில் உலர்த்தி, டப்பாக்களில் அடைத்து வைத்துக் கொள்ளலாம். 10 அல்லது 12 பழங்களை அட்டைப் பெட்டியில் ஒழுங்காக வைத்து மேலே எண்ணெய்த்தாளை ஒட்டியுள்ள சிப்பங்கள் பழக் கடைகளில் பார்ப்பதற்கு எவ்வளவு நேர்த்தியாக இருக்கின்றன.

## வருங்காலத்தில்

அத்தியின் அருமையை அறிந்து அதனை நம் நாட்டில் விருத்தி செய்யப் பழத் தோட்டங்களில் சிரத்தையுள்ளவர்கள் முன்வருதல் வேண்டும். சர்க்கார் பழ ஆராய்ச்சிப் பண்ணைகள் ஒட்டுச் செடிகளை மிகுதியாகத் தயாரித்து அவை தோட்டம் போடுகிறவர்களுக்கு எளிதில் கிடைக்கும்படி ஏற்பாடு செய்தல் அவசியமாகும். இவற்றையெல்லாம் செய்வதோடு பாலை மரம் முதலிய நாட்டு மரங்களோடு சீமை அத்தியை ஒட்டுப் போடும் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவேண்டும். தென்னாட்டில் பழ உலகிற்கு நாம் செய்யும் சேவைகளில் இவையும் அடங்கும்.

—உழவன்

# அன்னை தந்த சிறுகதை மன்னன்

## வெண்பாவூர் பொ. திருஞானம்

"எழுத்து நடை இயல்பாக உன்னிடம் அமைந்துள்ளது. சிறிது மெருகிட்டால் எல்லாம் சரியாகிவிடும். அப்போதுதான் மக்கள் அதிக சுவையை முற்றிலும் அனுபவிக்க முடியும்'! என்று ரஷ்ய எழுத்தாளர் கொரோ லெங்கோ மாக்சிம் கார்க்கியிடம் கூறினார். அதற்கு கார்க்கி, "அப்படியானால் நான் எழுதலாம் என்று தாங்கள் நினைக்கிறீர்களா?' என்று கேட்டார். "அதில் ஐயமென்ன? உன்னுடைய சிறுகதைகள்தாம் ஏற்கனவே பத்திரிகையில் வெளிவந்துள்ளனவே! இதைவிட வேறு என்ன வேண்டும்? இன்னும் ஏதாவது இதுபற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், எழுதுகின்றவற்றையெல்லாம் என்னிடம் கொண்டு வந்து காண்பி! முன்னேற வழிமுறைகள் சிலவற்றைச் சொல்லுகின்றேன்." என்றார்.

அவர் கூறியபடியே கார்க்கி எழுதிய கதைகளை அவரிடம்காண்பித்துவிட்டுப் பத்திரிகைகளுக்கு அனுப்பினார். அனுப்பியவை அனைத்தும் பத்திரிகைகளில் வெளியாயின. பணம் வந்தது. பெருமை, புகழ் எல்லாம் வந்தடைந்தன.

உலகில் சிறுகதைத் துறையிலும், நாடகத் துறையிலும், கவிதைத் துறையிலும் இன்னபிற துறைகளிலும் அரிதின் முயன்று பெரும்புலவரானோர் பலர். பேரும் புகழும் பெற்றோர் பலர். பிறர்விரும்பத்தக்கசான்றாண்மை பெற்றோர்பலர். அவர்களுள் தலைசிறந்த ஒருவர் "அன்னை" என்னும் அரிய நவீனத்தைத் தந்த சிறுகதை மன்னனை மாக்சிம் கார்க்கி.

அன்னார், கவிதை, கட்டுரை, கதை, நாடகம் ஆகிய துறைகளில் பேராசிரியராக விளங்கினார். என்றாலும் அன்னார் சிறுகதைத் துறையில், வெற்றி பெற்றமை மட்டும் இவண் நோக்கி மகிழ்தற்கினிதாம். இத் துறையில் அவர் பெற்ற வெற்றி, இளம் எழுத்தாளர்க்கு ஓர் வழிகாட்டியாகும் என்று கூறின் தவறாகாது.

19—ஆம் நூற்றாண்டுக்கும் 20-ஆம்நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் கார்க்கி வாழ்ந்தார். எழுபது ஆண்டுகளே இந் நிலவுலகில் வாழ்ந்தாரெனினும் அவர் செய்த இலக்கியப் பணியை நோக்குமிடத்து உலகம் உள்ள அளவும் அவர் புகழ் ஒளி வீசும் என்பது தேற்றம்

கார்க்கி ரஷ்ய நாட்டு எழுத்தாளர்; இவர் வாழ்ந்த காலம் ஜார் மன்னனின் கொடுங்கோலாட்சி நடைபெற்ற காலம். இவ்வாட்சியினால் கார்க்கி பெற்ற

இன்னல்கள் அளவற்றவை. அவை அத்தனையும் தாங்கிக் கொண்டுதான் மிகப் பொறுமையுடன் இலக்கியப் பணி செய்து வந்தார் அவர்.

தனக்குப் பத்து வயது நடந்து கொண்டிருக்கும் போதே தாய், தந்தையரை இழந்தார், கார்க்கி. தொடக்க காலத்தில் வாழ்க்கையின் எந்த முனைக்குச் சென்றாலும் தோல்வி தோல்வி படு தோல்விதான் கண்டு வந்தார். அவர் அதனால் மனம் உடைந்து ஒரு நாள் தற்கொலை செய்து கொள்ள முயன்றார். அதிலும் அவர் வெற்றி பெறவில்லை!

இயற்கைப் பொருள்களை, மனிதத் தன்மையை, மனிதனின் குணநலன்களையெல்லாம் கூர்ந்து நோக்கினார். போம்யாலோவ்ஸ்கி என்பவர் "மனித இயற்கையை, வாழ்க்கையை, எல்லாத் துறைகளிலும் பல திறப்பட்ட மக்களிடமிருந்து அறிய வேண்டும்." என்று எழுதியிருந்ததை அறிந்த கார்க்கி நன்றாகப் படித்தார். கொரோலொங்கோ, டால்ஸ்டாய், ஆண்டன் செகோவ் முதலான அறிஞர் பெருமக்களின் நூல்களையெல்லாம் பலமுறை படித்தார். படித்துப் படித்து அவரே ஒரு சிறந்த எழுத்தாளராக மாறினார்.

கார்க்கிக்கு முதன் முதலில் சிறுகதைத் துறையில் வழிகாட்டிய பேராசிரியர் கொரொலொங்கோ என்பவர்தான். இவர் எழுதிய கதைகளையெல்லாம் அவர் திருத்தித் தந்தார். "சமாரஸ் காயா கெசெட்டா" என்ற பத்திரிகை அலுவலகத்தில் பணியாற்ற கார்க்கியை அமர்த்தி வைத்தார். அப்பத்திரிகைதான் கார்க்கியைப் பெரிய மனிதனாக்கி வைத்தது.

கலுசின் என்பவர் கார்க்கியின் நண்பர். அவர், "கண்ணால் கண்டதை மட்டும் எழுது" என்று அறிவுரைகள் சில கூறினார். கார்க்கி அதையும் மனத்தில் வாங்கிக் கொண்டார். கார்க்கி தனக்குள்ள அனுபவ அறிவைக் கொண்டு, 'மேக்கர் சோத்ரா' என்ற ஓர் உயர்ந்த சிறுகதையை எழுதி கலுசினிடம் காண்பித்தார். கலுசின் அதைப் படித்துப் பார்த்து விட்டு அதை, 'காவ்காசு' என்ற பத்திரிகை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றார். அந்தப் பத்திரிகையாசிரியருக்கும் கதை பிடித்துவிட்டது. 1892-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் கார்க்கியின் அந்த முதல் கதை வெளியானது.

கதை எழுதிப் பத்திரிகையில் வெளிவர அவர் பட்ட பாடு சொல்லுந்தரமன்று. ஓயாமல் சதா படித்துக்கொண்டுதானிருப்பார். ரொட்டிக் கடையில் வேலையில் இருந்த போழ்தும், பல தொழிற்சாலைகளில் வேலை செய்த காலையும் நூல்கள் பலவற்றைப் படித்த வண்ணமாகத்தானிருந்தார்.

பாட்ரிக் பிராண்டி என்ற பிரபல நாவலாசிரியர் நாளொன்றுக்கு நான்கு மணி நேரமே தூங்குவாராம்; மற்ற நேரங்களில்

எல்லாம் படிப்புதான். அதே போல்தான் கார்க்கியும்நாளொன் றுக்கு நான்கு மணி நேரமே தூங்குவார்; மற்ற நேரங்களில் படித்துக்கொண்டுதானிருப்பார்.

இப்படிப் படித்ததால்தான் அறிவு பெற்றார்! பல்கலைக் கழ கத்தில் சேர்ந்து படிக்கவில்லை. எல்லாம் வீட்டிலேயே படித்துக் கொண்டார். பல்கலைக் கழக மாணவனுடைய அறிவைக் காட் டிலும் கார்க்கி மிக்க அறிவுடைய வர் என்று பிறரால் பாராட்டத் தக்க பெருமையினைப் பெற்றார்!

கார்க்கி ஆரம்ப எழுத்தாள ராக இருந்தபோது ஆண்டன் செக்கோவ் அவருடைய சிறுகதை யொன்றைத் திருத்தும் போது, 'கடல் சிரித்தது' என்று ஒரு வரி இருந்தது. "இதை நீயே திரும்பப் படித்துப் பார். இது ஓர் உயர்ந்த வருணனையா? சுருக்க மாக முடித்து விட்டாய்! எங்ங னம் கடல் சிரிக்கும்? அழும்? சிரிக்கவும், அழவும் செய்யாது! டால்ஸ்டாய் எழுதியுள்ளதைப் பார்! கதிரவன்உதிக்கின்றான்' பற வைகள் பாடுகின்றன! இங்கே யாராவது அழுகின்றார்களா? சிரிக்கிறார்களா? இல்லையே! இதுதான் முக்கியம். நடையிலே எளிமை, கருத்துத் தெளிவு, ஆகியன வேண்டும்." என்று தவறை எடுத்துக் காட்டினார். தவறை எடுத்துக் காட்டிய செக் கோவ் மேல் எரிந்து விழவில்லை, கார்க்கி. அதற்குப் பதிலாகக் குற்றத்தை ஒப்புக் கொண்டு திருத்தியதற்காக நன்றி சொல்ல

முற்பட்டார். இக்குற்றம் கார்க்கி எழுதிய 'மால்வா' என்ற கதை யில் இருந்தது. அப்போதுதான் எழுத்துலகில் கார்க்கி அடி யெடுத்து வைத்திருந்த காலம்.

இதற்குப் பிறகு 1894–1895 ஆண்டுகளில் செல்காஷ், பால்கன் கீதம் என்ற கதைகளையும் 1897-ல் 'பிராணிகள் ஒரு காலத்தில் மனிதர்களாக இருந்திருக்கின் றன' என்ற கதையையும் அவர் எழுதினார். 1898-ல் அவருடைய இரண்டு சிறுகதைத் தொகுப்பு கள் வெளியாயின. 1905-ல் செயிண்ட் பீட்டர் சிறையில் இருந்த காலேதான், 'சூரிய புத்தி ரர்கள்' என்ற உயர்ந்த கதையை உருவாக்கினார்.

அவர் அவ்வப்போது அயல் நாடுகள் பலவற்றிற்கும் சென்றார் அனுபவம் பெற்றார். தான் கண் டது, கேட்டது, அனைத்தையும் நூல் வடிவிலே, 'யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக!' என்ற கொள்கைப்படி வெளியிட் டார்.

1934-ஆம் ஆண்டு மாஸ்கோ வில் ரஷ்ய நூலாசிரியர் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டி ற்கு இலண்டனிலிருந்து பிரபல நாவலாசிரியர் வில்லியம் எல் லிஸ் என்பவரும் வந்திருந்தார். மாநாடு முடிந்து இங்கிலாந்து சென்றதும் அவர் அங்குள்ள பத்திரிகையில், "மாநாட்டின் தலைவர் மாக்சிம் கார்க்கி, வயதில் முதிர்ந்தவர். ஆனால் இளைஞரைப் போல் எப்போதும் சுறுசுறுப் பாக இருப்பார். அவருடைய

தோற்றம் என்னுள்ளத்தைக் கவர்ந்தது; சிங்கத்தின் தொனி போன்றது அவர் தொனி! அவருடைய நீல விழிகள் தாரகைகள் போல் மின்னிக்கொண்டிருந்தன. குழந்தைகளின் அன்பர் தொண்டர், முதியோர்களுக்குக் கடவுள் போன்று தோன்றி தொழிலாளிகளுக்கோ நெருங்கிய தோழனாய் விளங்கினார்.'' என்று எழுதினார்.

''கடந்துபோன காலத்தைப் பற்றியும் எழுத்தாளன் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்; நிகழ் காலத்தைப்பற்றியும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.'' என்று மாக்சிம் கார்க்கி இளம் எழுத்தாளர்களுக்குக்கூறிய அறிவுரை என்றும் இன்பம் நல்கும் பொன் மொழியாகும்.

மாக்சிம் கார்க்கியை உலகம் முழுவதற்கும் அறிமுகம் செய்து வைத்து அவருக்கு மிக்க புகழினையும், பெருமையினையும் தேடித்தந்தது அவர் எழுதிய, அன்னை என்ற ஒப்பற்ற புதினமேயாகும். இது 120 மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கோடிக்கணக்கான படிகள் விற்பனையாகியுள்ளன. தமிழிலும் இது 'அன்னை' என்ற பெயரில் வெளியாகி தமிழ் மக்களின் அன்பையும், புகழையும் பெற்றுள்ளது.

---

## கீழத்திவாக்கத்தில்
## 'வெண்ணிலா'

கடந்த 1-5-61 மாலை, மதுராந்தகம் வட்டம், கீழத்திவாக்கம், கழகத் துவக்கப்பள்ளியின் ஆண்டுவிழா திரு. காளியப்பன் அவர்கள் தலைமையில் நடந்தது.

எலப்பாக்கம், கழக உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திரு. ஆ. தனபால் அவர்கள் 'பள்ளியில் பெற்றோரின் பங்கு' என்ற தலைப்பில் உளங்கவர் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார்.

இரவு, 9 மணிக்கு திரு. **தாமரைக்கண்ணன்** தீட்டி, நம் 'ஆரம்பக் கல்வியில்' வெளிவந்து வாசகர்களின் இதயங்களைக் கொள்ளைகொண்ட' **'வெண்ணிலா'** நாடகத்தைப் பள்ளி மாணவர்கள் சிறப்புற நடத்திக் காட்டினார்கள். அச்சிறுபாக்கம் சரகக் கல்வித் துணை ஆய்வர் திருமிகு. **எஸ். ஆர். கல்யாணராமன்** அவர்கள் நாடகத்திற்குத் தலைமைதாங்கி அரியதொரு கருத்துரை வழங்கினார்.

திரு. கே. தட்சிணாமூர்த்தி (ஆநந்தவிகடன், சென்னை) அவர்கள் அன்பளிப்பாகக் கொடுத்த பரிசுப் பொருள்கள், சிறப்பாக நடித்த மாணவர்கட்கு வழங்கப்பட்டன.

பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. இரா. குமாரசாமி நன்றிகூற நிகழ்ச்சி இனிது முடிந்தது.

# ஜெர்மன் திருமணச் சடங்குகள்

## திருமதி சசிகலா த்ரிவேதி

ஜெர்மனியில் வெண்ணிறம் ஆனந்தத்தை குறிக்கும் நிறமாகும். உடைநாகரிகக் காட்சி ஒன்றில் வெண்ணிற உடையழகு என்பது எப்போதும் அந்த நிகழ்ச்சிக்குச் சிகரம் வைத்தாற் போல் அமையும். "வெள்ளை நிறக் கனவு உடை" என்று அறிவிப்பாளர் சொல்ல வேண்டியது தான் தாமதம், சபையினரில் கலியாணமாகாத பெண்களின் மனமெல்லாம் ஆனந்தத்தால் படபடக்கும். அவர்களில் பலர் அந்த நிமிஷமே தமது சொந்தக் கனவுகளில் மூழ்கி விடுவார்கள்; தாமும் சீக்கிரமே, நெடிய வெண்ணிற உடையும், அசைந்தாடும் முகவலையும் அணிந்து, தம் மனதுக்கிசைந்த இளைஞர்களுடன் திருமணப் பீடத்துக்குக் கை கோத்துச் செல்லப்போவதைக் கனவாகக் காண ஆரம்பித்து விடுவார்கள்.

திருமண நாளுக்கு முந்தின நாள் மாலையில், தனி வாழ்விலிருந்து விடை பெற்றுக்கொள்ளும் கவர்ச்சிகரமான நிகழ்ச்சி ஒன்று நடை பெறும். "நெடு நாளாக இருந்த நிலை ஒன்று மாறினால் அதன் மூலம் அதிருஷ்டம் விளையும்" என்று ஜெர்மனியில் சொல்வதுண்டு. மணமக்கள் இருவருடைய நண்பர்களும், மற்றோரும் இந்த நிகழ்ச்சி நடக்கும் வீட்டைச் சுற்றி வருவார்கள்; மறுநாள் வரப்போகும் பெரும் மாறுதலில் உதவி செய்யும் வகையில் அவர்கள் கணக்கற்ற வேடிக்கைகளில் ஈடுபடுவார்கள். வீட்டிலுள்ள பழைய கோப்பைகள், தட்டுகள், பாத்திரங்கள் முதலிய அனைத்தையும் உடைத்து, அந்த உடைசல்களையெல்லாம் வீட்டு வாசலில் குவிப்பார்கள். இந்தக் கேளிக்கை நிகழ்ச்சி முடிந்தபின் பார்த்தால் பழைய சாமான்களின் நொறுங்கல் ஒரு பெரிய குவியலாகவே குவிந்துவிடும். "ஐயோ பாவம்" என்று மணமக்களுக்காக இரங்கி யாராவது, அந்தத் துண்டு துணுக்குகளை அகற்றுவதில் மணமக்களுக்கு உதவி செய்ய முயன்றால் அவரை மற்றவர்கள் சும்மாவிட மாட்டார்கள். அந்தத் துண்டு துணுக்கு குப்பைகளையெல்லாம் மணமக்கள்தான் பூராவாக அகற்ற வேண்டும். வருங்காலத்தில்–மண வாழ்வு முழுவதிலும்–அவர்களிருவரும் தமது கஷ்டங்களைத் தாமே பரஸ்பர ஒத்துழைப்புடன் சமாளித்தாக வேண்டும் என்பது கருத்து.

ஆலயத்தில் திருமண விழாவுக்கென மணமகளை அழைத்து வரும் வரையில் மணமகன், மணமகளுடைய திருமண உடையைப் பார்க்கக் கூடாது என்றும்

ஒரு விதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் மதச்சடங்குகளுடன் கூடிய திருமணத்துக்கு முன், ரெஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் பதிவுத் திருமணம் நடைபெற்று விடவேண்டும். ஆகையால் பதிவுத் திருமணத்துக்கு மணமகள் வெண்ணிற உடையில் செல்வதில்லை. நல்ல எளிய உடை அணிந்து ரெஜிஸ்ட்ரார் அலுவலகத்துக்குச் செல்லுவாள். பதிவுத்திருமணம் முடிந்தவுடன் வீட்டுக்குத் திரும்பிச் சென்று வெண்ணிற உடையணிந்துகொண்டு பிறகு தான் ஆலயத்துக்குவருவாள். ரெஜிஸ்ட்ரார் ஆபீஸிற்குச் செல்லும் போது அவள் தன் கையில் பூச்செண்டு ஒன்றை ஏந்திச் செல்வது வழக்கம். அவள் மணமகள் என்பதை இந்தச் செண்டு மூலம் ஜனங்கள் அடையாளம் கண்டு கொள்வார்கள்.

ஆலயத் திருமணத்துக்கென மணமகள் பளபளப்பான வெள்ளை கவுன் அணிந்து வீட்டை விட்டு வெளியே வருவாள்! பின்னால் தொங்கும் நீளமான மேலாடை தரையில் படாமலிருப்பதற்காக இரண்டு குழந்தைகள் அதை ஏந்தியவாறு பின்னே நடந்து வருவார்கள். மணமக்களுக்கு முன்னே அவர்களுடைய இளம் உறவினர்களோ, நண்பர்களோ இரண்டு மூன்று பேர் நடந்து சென்று, மணமக்களின் பாதையில் மலர்களை இறைப்பார்கள். இப்போதெல்லாம் மணமக்கள் சாதாரணமாக காரில்தான் ஆலயத்துக்குச் செல்கிறார்கள். ஆனால் கிராமங்களில் இன்னமும் சிலர், கார் இருந்தாலும் கூட, பழைய வழக்கப்படி சாரட்டில்தான் ஆலயத்துக்குச் செல்கிறார்கள். ஏன் கிராமங்களில் மட்டும்தானா? சமீபத்தில், ஹாம்பர்க் நகரத்துப் பத்திரிகை ஒன்றின் விளம்பர நிபுணர்கள், மக்களின் கவனத்தை எடுத்தவுடன் கவரக்கூடிய படம் ஒன்றை விளம்பரத்துக்கு உபயோகிக்க விரும்பினார்கள். என்ன வெல்லாமோ யோசித்து விட்டுக் கடைசியில் வெள்ளை நிறத் திருமண சாரட்டு ஒன்றை அந்த விளம்பரத்துக்கு உபயோகிப்பதென்று நிச்சயித்தார்கள். விளம்பரத்தை அனுமதிக்கும் மணமக்கள் அந்த சாரட்டை இலவசமாக உபயோகித்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. மணமக்கள் சாராட்டு ஒன்றில் வந்திங்குவதைப் பார்ப்பதற்காக ஆலயத்தில் கூட்டம் ஒரேயடியாகக் கூடி விட்டது. தம் அவசர காரியங்களை யெல்லாம் ஒதுக்கிவிட்டு மக்கள், இந்தப் பழம்பெரும் ஆனந்தத்தில் பங்கு கொள்ளக் கூடிவிட்டார்கள். இது மட்டுமா? மணமக்கள் பழங்காலத்து சாரட்டு ஒன்றில் பவனிவருவதைப் பார்ப்பதற்காக, பாதை நெடுகிலும் இமைக்க முடியாது கூட்டம்; வண்டிப் போக்குவரத்தில் கடும் நெருக்கடி ஏற்பட்டு விட்டது. எல்லோருக்கும் அவ்வளவு ஆனந்தம்.

# அங்கே நான் கண்டவை

[ஆர். காந்திமதி அம்மையார், எம்.ஏ., பி.டி.]

[சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் ஓராண்டுக் காலம் வரலாற்றுத் துறை ஆசிரியராகப் பணியாற்றிய திருமதி காந்திமதி அம்மையார் அவர்கள், அங்கே தாம் கண்ட காட்சிகளையும் அறிந்த செய்திகளையும் உணர்ந்த உண்மைகளையும் அழகுபட விளக்கி 'ஆநந்த விகடன்' இதழில் முன்னர் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். அவற்றில் ஓர் அருமையான கட்டுரை இது.]

நமது நாட்டில் நமக்கு இருக்கும் சில அன்றாடப் பிரச்னைகள் அமெரிக்க மக்களுக்குக் கிடையாது. விடிந்து எழுந்திருந்தால் அவர்கள் பால்காரனுடன் சண்டைக்கு நிற்க வேண்டியதில்லை. தயிர்க்காரனுடனும், வெற்றிலை விற்கிறவனிடமும், கறிகாய்க் கூடைக் காரியிடமும் கூட அவர்கள் சத்தம் போட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இதெல்லாம் கறார் விலை போட்டு விற்கும் கடைகளுக்குப் போய்த் தான் வாங்க வேண்டிய நிலையில் இருக்கும்போது அவர்களுக்குப் பிரச்னை எங்கிருந்து எழ முடியும்? அமெரிக்க நாட்டில் பல சரக்குக் கடைகளில் நுழைந்து சாமான்கள் வாங்குவதே ஒரு இன்பம். பால், வெண்ணெய், மோர், கறிகாய்கள், பழ வகைகள் இவைகளுடன் சகல விதமான மளிகை சாமான்களையும் ஒரே கடையில் புகுந்து வாங்கி வரலாம். இந்த மாதிரி கடைகளுக்கு இங்கே 'க்ரோஸரி ஸ்டோர்ஸ்' (GroseryStores) என்று பெயர். நம் ஊரில் மளிகைக் கடையில் நின்று சாமான் வாங்கும் போதே நமது மூக்கில் ஒரு தினுசான வாசனை வந்து முட்டும்! அது மாதிரியெல்லாம் அங்கே கிடையாது. அங்கே கடையில் எந்த மூலையிலும் மாதிரிக்குக்கூட ஒரு வாசனை வராது. பல சரக்குக் கடைகளும் அங்கே மிகப் பெரியவை. அமெரிக்கர்களுக்கு எதுவும் சின்னதாகக் கட்டத் தெரியாது என்றுதான் முன்னமேயே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேனே!

கடைகளுக்கு வெளியே நின்று கொண்டு "எனக்கு அது வேண்டும். இது வேண்டும்" என்று கடைக்காரரிடம் கேட்டுக்கொண்டிருக்க வேண்டியதில்லை. உள்ளேயிருக்கும் அத்தனை சாமான்களும் வெவ்வேறு ரகமான தொகுப்பில் பிரிக்கப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இந்த மாதிரி அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் தட்டுகளின்

இடையே நமக்குத் தாராளமாக நடந்துபோக வசதி இருக்கும். நாமாக நமக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு விலையைக் கொடுத்து விட்டு வெளியேறலாம். இது ஒரு பெரிய வசதிதான். அங்கே கடைகளில் நாமாக சுதந்திரமாக (கடைக்காரன் நம்முடன் காவலுக்கு இல்லாமல்!) - எப்பொருளையும் தொட்டுப் பார்த்துப் பொறுக்கிக் கொள்ள முடியும். எல்லாம் அப்படியே திறந்து கிடப்பது போல இருக்கும். நாம் தொட்டாலும் கேள்வி கிடையாது. நமக்கு இந்தப் பலசரக்குக் கடைகளில் இருக்கும் சுதந்திரத்தைப் போல் வேறு எங்கேயும் இருக்காது போலத்தான் தோன்றும். இதற்குள் சும்மா — சாமான் வாங்காவிட்டாலும் — நடந்து உலாவுவதே ஒரு நல்ல பொழுது போக்கு என்றும் சொல்லுவேன்.

அன்றாட வாழ்க்கையில் சில்லறைப் பிரச்னைகளெல்லாம் எழுந்து நம்மைத் தினமும் கொல்லாதிருக்கும்படி வசதி ஒவ்வொன்றையும் நுட்பமாக ஆராய்ந்து அதற்குத் தக்கபடி தங்கள் சமூக வாழ்வை எவ்வளவு இன்பமாக ஆக்க முடியுமோ அவ்வளவும் அந்த அமெரிக்க மக்கள் உழைத்துச் செய்து கொண்டிருப்பவை.

அதிக ஆச்சரியம்தான்! கஷ்டங்கள் ஏதும் இல்லாமல் காலையில் எழுந்திருப்பதிலிருந்தே இன்முகத்துடன் அன்று தினத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று அவா படைத்தவர்கள் அந்த மக்களும்! அதனால் ஒரு பிரச்னை இருந்தால் கூட சகிக்க மாட்டார்கள் அவர்கள். பிரச்னைக்குத் தட்சணமே பரிகாரம் தேடாவிட்டால் அவர்களுக்குத் தூக்கம் பிடிக்காது போலிருக்கிறது! அதனால்தான் கஷ்டம் ஏதுமின்றி தினப்படி வாழ்க்கை போவது தெரியாமல் வாழ்ந்து செல்ல வேண்டி, உள்ளும் புறமும் கணக்கற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது ஐரோப்பிய நாடுகள் கூட நம்மைப்போலப் தரித்திரமாகத்தான் தோன்றுகின்றன.

அன்றாட வாழ்க்கையில் அத்தனை நுட்பங்களையும் கவனித்து சில்லறைப் பிரச்னைகள் ஏதுமின்றி எப்படித்தான் தங்கள் வசதிக்கு ஏற்ப யாவற்றையும் அமைத்துக் கொண்டார்களோ என்று எண்ணும்போதெல்லாம் என்னுடைய வியப்பு அடங்குவதே இல்லை. என்னதான் மெஷின்கள் இருந்தாலும் இவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்து ஒழுங்குபடச் செய்ய மூளை வேண்டாமா? யாரும் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள் அம்மக்கள். அதனால்தான் அவர்கள் வாழ்க்கையும் அதி விரைவில் முன்னேறி வருகிறது. இத்தனை மெஷின்கள் இருந்தாலும், அவர்களும் பாடுபட்டு

வேலை செய்வதில் ஒரு குறை பாடும் இல்லை.

பல சரக்குத் கடைகளில் நாம் எந்தச் சாமான் எங்கே இருக் கிறது என்று கேட்டுக் கொண் டிருக்க வேண்டிய தில்லை. நிமிர்ந்து பார்த்தால் தூரத்தே அந்தந்த இடங்களில் வைக்கப் பட்டிருக்கும் சாமான்களின் தொகுப்புப் பெயர் கூரையி லிருந்தே தலைக்கு மேல் பெரி தாக எழுதித் தொங்க விடப்பட் டிருக்கும். உதாரணமாக கறி காய்கள் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு மேலே பெரிதாக ஒரு போர்டு தொங்கும். நாம் கடையில் புதிதாக நுழையும் போதே, கண்ணுக்குத் தெரியு மட்டும் பார்த்தால் எங்கெந்த இடத்தில் என்னென்ன சாமான் கள் இருக்கின்றன என்பதை வெகு சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். பத்து வயதுக் குழந்தைகூட அங்கே போய் சாமான் வாங்குவது வெகு சுல பம்.

அந்த மாதிரிக் கடைகள் சிறு கிராமங்களில் கூட ஆங்காங்கே பரவிக் கிடக்கும். நியூயார்க், சிகாகோ, வாஷிங்டன் போன்ற பெரிய நகரங்களில் இருக்கும் பலசரக்குக் கடைகளையும் விரி வாகப் பார்த்திருக்கிறேன். கிளார்க்ஸ்டன் - ஹூயிஸ்டன் போன்ற சிறிய நகரங்களிலும் இவற்றை ஊடுருவிப் பார்த்திருக் கிறேன். அளவில், கடை கொஞ் சம் சின்னது, பெரியது என்பது தவிர, மற்றப்படி சாமான்களை ஒழுங்குபட அடுக்கி வைக்கும் பாணியிலோ, சாமான் தினுசு வகைகளிலோ, சுத்தமாக வைத் திருப்பதிலோ, கஜார் விலையிலோ நகரத்துக் கடைக்கும் கிராமத்தி லுள்ள கடைக்கும் நான் எந்த வித்தியாசத்தையும் காண முடிய வில்லை. இதனால் கிராமத்தை யும் சிறிய நகரம் என்று அவர் கள் அழைப்பதில் தவறு என்ன?

மற்ற ஜவுளிக் கடைகள் மாதிரி இவை மாலை ஐந்தரை மணிக்கே சாத்தப்படுவதில்லை. அநேகமாக இவை காலை ஒன்பது மணியி லிருந்து இரவு ஒன்பது மணி வரை கூடத் திறந்திருக்கும். இவற்றில் சில ஞாயிற்றுக் கிழமை களிலும் திறந்து வைக்கப்பட் டிருக்கும். சிறிய ஊர்களில் கூட இரண்டு மூன்று கடைகளா வது இரவு பன்னிரண்டு மணி வரையிலும் திறக்கப்பட்டிருக் கும். வேலை செய்து வீடு திரும் பும் மக்களுக்கு இவை எவ்வளவு சௌகரியம் என்று சொல்லத் தேவையில்லை.

இன்னொன்றும் இங்கே சொல் லத் தக்கது. எவ்வளவு உயர்ந்த படிப்புப் படித்துப் பெரிய உத்தி யோகம் பார்க்கும் ஆண்களும் சரி, பெண்களும் சரி, மளிகைக் கடைக்குப் போய்த் தாங்களே சாமான்களை வாங்கி, மூட்டை போல் கையில் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு வருவதை அங்குக் கௌரவக் குறைவாகக் கருது வது இல்லை. இது மிகவும்

யாராட்டத் தக்கதுதான். வேலைக்காரி என்றுவது மட்டும் போட்டால்கூட என் தாயார் என்னைச் சின்ன வயதில்கூடக் கறிகாய் வாங்கக் கடைக்கு அனுப்பியது கிடையாது. கறிகாய் வாங்க, பையைக் கையில் மாட்டிக் கடைக்கு அனுப்புவது என்றால் நம்மவர்களுக்கு அவ்வளவு குறைவாகப்படும். வீட்டுக்கு வேலையாள் இல்லாவிட்டால் கஷ்டப்பட்டாலும் கஷ்டப்படுவோமே யொழிய, நாம்தான் கடைக்குப் போய் வேண்டியதை வாங்கி வந்தால் என்ன என்று எண்ணித் துணிந்து புறப்பட மாட்டோம்!

அப்படியே நம் ஊரில் பெரிய குடும்பத்துப் பெண்கள் கறிகாய்க் கடைக்குத் தாங்களே போய் வாங்கினலும், "அந்த அம்மாள் கருமிடோய்! வேலைக்காரனைக்கூட நம்பாது பெட்ரோல் செலவையும் பாராமல் தானகவே காரில் கடைக்கு வந்து விடுகிறார்" என்று நம்மில் பலர் கேலி செய்வதும் உண்டு. இந்த மாதிரி சில்லறைக் கௌரவங்களைப் பாராது வாழ்க்கையை நடத்த அமெரிக்க மக்கள் முனைவதைக் காண்பதும் ஒரு ஆனந்தம்தான்! நம் நாட்டு உத்தியோகஸ்தர்கள் பலருக்கு—ஆண்களும் சரி பெண்களும் சரி—கறிகாய்க் கடை, மளிகைக் கடை முதலியன எப்படி யிருக்கும் என்றுகூடத் தெரியாது. கடையில் சாமான் வாங்குகையில் வேலைக்காரர்கள் திருடினலும் சகித்துக் கொண்டிருப்பார்களே தவிர, அதைத் தவிர்க்கும் பொருட்டாவது, தாங்களே தான் போனல் என்ன, முழுகியா போய்விடும் என்று நினைத்துக் கடைக்குக் கிளம்ப மாட்டார்கள். இப்படிப் பழைய காலத்துப் பாணியில் வைத்து நாம் பார்க்கும் கௌரவ மெல்லாம் அங்கு அமெரிக்க மக்கள் பார்ப்பதில்லை. இவ்வளவு சொல்லுகிறேனே யொழிய நானும் எனது வாழ்நாளில் நம் ஊரில் துணிந்து தனியாக மளிகைக் கடைக்கோ, கறிகாய் வாங்கவோ போனதே கிடையாது.

"வீட்டுத் துடைப்பம் கட்டையாகப் போய் விட்டது. கடைக்குப் போய் வேறு விளக்குமாற்றை வாங்கி அதைத் தூக்கிக் கொண்டு தெருவில் நடந்து வீட்டுக்கு வா" என்று என் கணவர் என்னிடம் சொன்னல் என்னுடைய உயிரே போய்விடும் போல் தான் தோன்றும்! "நானவது! துடைப்பத்தைக் கையில் தூக்கிக் கொண்டு தெருவில் நடந்து வருவதாவது!" என்று என் மனத்தில் உடனே படும்! இவ்வளவெல்லாம் அமெரிக்க நாட்டு மக்களின் வாழ்வை விரிவாகக் கண்டும், ஊர் திரும்பிய பின்னும் எனக்கு இந்தத் தைரியம் வாராததை ஒத்துக் கொள்ளுகிறேன்! இதெல்லாம் நம்முடைய கட்டையிலேயே ஊறியது! வேறு என்ன?

அந்நாட்டுக் கோடீச்வரன் வீட்டுப் பெண்களும், வீட்டைச்

சுத்தம் செய்ய வேண்டி, துடைப்பம்போல விற்கும் நீளமானது ஒன்றை வாங்கிக் கையில் தூக்கிக் கொண்டு தெருவில் கூசாமல் தான் நடந்து போவார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் எனக்கு எதிர்ப்படும்போதெல்லாம், "இப்படி நம் ஊரில் நான் நடந்து சென்றால் எத்தனை பேர் என்னை நின்று வேடிக்கை பார்ப்பார்கள்?" என்று நினைத்துக் கொள்வேன்! நன்றாக 'டிரெஸ்' பண்ணிக் கொள்வதற்கும் கடைக்குப் போவதற்கும் சம்பந்தப்படுத்துவதை நாமும் வருங்காலத்தில் ஓரளவுக்கு விட்டுவிட வேண்டியதுதான்!

மாலை நேரங்களில் சிற்சில சமயம் எங்கள் பள்ளிகளின் சூப்பிரண்டெண்டுக்கு வீட்டிலிருக்கும் அவரது மனைவியிடமிருந்து டெலிபோன் வரும். ஆபீஸ் வேலை முடிந்து வீட்டுக்கு வருகையில் வழியில் இருக்கும் பலசரக்குக் கடையில் காரை நிறுத்திச் சில சாமான்களை வாங்கி வரும்படி அம்மையாரிடமிருந்து உத்தரவு பிறக்கும்! அந்த சூப்பிரண்டின் கௌரவம் என்ன? கல்வி சம்பந்தமாகக் கோடிக்கணக்கான டாலர்கள் அவர் கையில் ஒவ்வொரு ஆண்டும் புரளுவது எப்படி! இப்பேர்ப்பட்ட பெரிய உத்தியோகஸ்தர்கூட வாய் பேசாது. வழியில் கடைச் சாமான்கள் வாங்கிக்கொண்டு தான் வீட்டுக்குச் செல்வார். எவ்வளவு பெரிய பதவி வாழ்க்கையில் இருந்தாலும் "தன் கையே தனக்கு உதவி" என்பதில் முழு நம்பிக்கை படைத்தவர்கள் போலும் அந்த மக்கள்.

வீட்டுக்கு நேரில் வந்தே சொம்பைக் கவிழ்த்துக் காட்டி விட்டுப் பாலைக் கறக்க வைத்து நம்பிக்கையாக வாங்கவேண்டும் என்பது இல்லை அந்த நாட்டில். அது "பாலும் தேனும் கலந்து வழிந்தோடும் நாடு" என்றால் மிகையாகாது. பால் அங்கே எவ்வளவு நல்லதாகவும், தாராளமாகவும் கிடைக்கிறது என்று எம்மாத்திரம் சொன்னாலும் போதாது தான். அங்கு இருந்த காலத்தில் எனக்குப் பாலைப் பற்றியே கவலை இல்லை.

அவ்வளவு சுத்தமாகப் பால் விற்கும் முறையை நான் வேறு எங்குமே பார்த்ததில்லை. ஆஸ்திரேலியாவிலும், நியூஜிலாந்து தேசத்திலும்தான் அமெரிக்காவிற்கு ஈடாக நல்ல பால், அதி சுத்தமான முறையில் விற்கப்படுகிறது என்று சொல்லப் படுகிறது.

படி, ஆழாக்கு என்று இல்லாமல் இங்கே பாலை காலன் கணக்கில் கணக்கிடுகிறார்கள். ஒரே சமயத்தில் அரைக்கால் காலனுக்குக் குறைந்து பால் வாங்க முடியாது. இதுதான் மிகக் குறைவான அளவு.

இங்கே பாலைப் பாக் பண்ணி விற்கும் விதமே அலாதி. அதற்கு என்று பிரத்தியேகமாக மேல் விளம்பரத்துடன் அச்சிடப்பட்ட

அட்டைப் பெட்டிகளில் தான் பாலை அடைத்து ஸீல் பண்ணி விடுகிறார்கள். இந்தப் பெட்டிகளைத் தொட்டால் ஏதோ மெழுகைத் தடவியிருப்பதுபோல் கையில் உணர்ச்சி தட்டும். இந்தப் பெட்டிகளில் கால், அரை என்று விதம் விதமான அளவு உண்டு. தண்ணீர் வாடையே படாத பாலை, கிருமிகள் இல்லாதபடியும் மெஷின் கொண்டு புனிதமாக்கி இம்மாதிரி பிரத்தியேகமான மெழுகு போன்று உள்ள அட்டைப் பெட்டிகளுள் அடைத்து சீல் பண்ணி விட்ட பிறகு பெட்டியைக் கவிழ்த்தாலும் வெளியே ஒரு சொட்டுக் கூட சிந்தாது. அவ்வளவு நேர்த்தியாக இருக்கும் அந்த 'பாக்கிங்' முறை. 'எந்தப் பக்கம் அதன் மூடியைத் திறக்கலாம்' என்றும் அம்புக் குறி கொண்டு அதில் காட்டப்பட்டிருக்கும். கைவிரலாலே இதை வெகு சுலபமாகத் திறக்கலாம். இருந்தும் பால் சிந்தாத வண்ணம் அப் பெட்டியின் முறை அமைந்திருப்பது முக்கியமாகக் கவனிக்கத் தக்கது.

நமது கணக்குப்படி ஒரு பட்டணம் படி பால் அங்கே சுமார் நான்கு ரூபாய் ஆகிறது. இந்த விலை அந்த மக்களுக்கு ஒன்றும் பெரிதல்ல. அந்தப் பெட்டிக்கே அத்தனைக் காசு கொடுக்கலாம் போன்று இருக்கும். இம்மாதிரி பாலை நாலைந்து அட்டைப் பெட்டிகளில் வாங்கி மக்கள் 'தங்கள் சமையல் அறையிலுள்ள ரெப்ரிஜிரேடரில் வைத்து விடுவது சகஜம். பத்து நாட்களின் தேவைக்கு மேல் இங்கே பொதுவாக வாங்குவது இல்லை.

இது புனிதமாக்கப்பட்ட பாலாதலால் அங்கே பொதுவாகப் பாலைக் காய்ச்சுகிறதே யில்லை. அப்படியே பச்சைப் பாலை ஜலம் போலக் குடிக்கிறதுதான் பழக்கம்.

---

## அறிவுச் சுடர்கள்

அனைவரும் விடுதலை பெறுகிறவரையில் எந்த மனிதனும் முழு விடுதலை பெற முடியாது. அனைவரும் ஒழுக்க சீலர்களாக மாறும் வரையில் யாரும் முழு ஒழுக்க சீலராக மாறமுடியாது. அனைவரும் மகிழ்ச்சி அடைகிற வரையில் எவரும் முழு மகிழ்ச்சி அடைய முடியாது.

—**ஹெர்பர்ட் ஸ்பென்சர்**

அஞ்சா நெஞ்சுடன் உலவவேண்டும் என்றால் திமிருடன் இருக்கவேண்டும் என்றல்ல பொருள், அச்சத்தை விட்டுவிட வேண்டும் என்பதுதான் கருத்து.

—**காந்தியடிகள்**

இலக்கியத்தில் ஓர் இதழ்!

# அன்புடை நெஞ்சம்!

[ தாமரைக்கண்ணன் ]

[ இந்தக் கட்டுரை...........

இலக்கியப் படைப்பா......?

இல்லை......!

மனோதத்துவச் சிறுகதையா......?

அல்ல......!

பண்டைக் காலத் தமிழர் வாழ்வின் படப்பிடிப்பா......?

அல்ல......அல்ல......

பெண் மனத்தைச் சித்தரிக்கும் எழுத்தோவியமா ?

அதுவும் இல்லை......!

பின்னர்......?

மேற்கூறிய அத்தனைச் சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்ற ஓர் அரிய தீஞ்சுவைத் தமிழ் ஓவியம்!]

*அமைதி! எங்கும் ஒரே அமைதி: ஊர் உறங்கிக்கொண்டிருந்தது!*

*அந்த இல்லத்தில்...மங்கலாக எரிந்து கொண்டிருந்தது, சிறிய அகல் விளக்கு ஒன்று.*

*கொந்தளித்த உள்ளத்துடன் மலர்ப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள், அவள்! குமுறும் தன் இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டாள். ஆனாலும், அனலிற்பட்ட புழுவாக—தரையில் இட்ட மீனைகத் துடித்துத் துள்ளி விழுந்தன எண்ணங்கள்!*

*நீண்டதோர் நெட்டுயிர்ப்பு! அப்பாடா! அவள் மனச்சுமை கொஞ்சம் குறைந்தது.*

*அவளை எங்கெங்கோ இழுத்துச் சென்றன நினைவலைகள்.*

*ஆம்! அன்றுதான் அவனைச் சந்தித்தாள். பூப் பறிக்கப் பூவையர் புடைசூழச் சென்றிருந்தாள், அந்தப் பாவை. விரிமலர் பரப்பி நின்ற வேங்கை மரத்தின் கீழ் நின்றனர் அனைவரும். அப்பொற்கொடிகள் தாவிப் பார்த்தும் எட்டாத அளவு உயர்ந்திருந்தது பாழும் கிளை யொன்று. அல்ல பாழும் கிளை யல்ல. இரு*

வரையும் ஒன்று சேர்த்து வைத்த அக்கிளை வாழ்க என்றும்!

மலர்க் கொத்துக்கள் நிரம்பிய அக்கிளை தாழ்ந்துவர, வழக்கப் படி, 'வேங்கை—வேங்கை' என்று கூக்குரலிட்டுக் கைகொட்டிக் குதித்து ஆடினர். அப் பூங்கொடிகள்! வேங்கைக் கிளை தாழ்வதற்குள் அதன் வரி மலரைப்பறிப்பதற்குள் 'எங்கே வேங்கை எங்கே வேங்கை' என்று வேலும் வில்லும் ஏந்தி, மான் தேடிச் சென்ற ஒருவன் ஓடிவந்து நின்றான் அவர்கள் எதிரில்! எதிர்பாராத அந்த நிகழ்ச்சியால் பதிலேதும் கூறாது ஒருவர் மறைவில் ஒருவராகப் பதுங்கினர் அவர்கள். திகைத்தன அவர்கள் கண்கள். ஆனால், அவள் கண்களுக்கு மட்டும் அவன் தோற்றம் தித்திப்பாக இருந்தது. அவன் கண்களுக்கு அவள் அழகு மயக்கத்தை ஊட்டியது. அழகு கொழிக்கும் அந்த நிலத்தை நோக்கினான் அவன். கோல நிலவைப் பழிக்கும் அந்த முகவழகி நிலத்தை நோக்கினாள்!

இப்படித்தான் அவர்கள் அன்பு உதயமாயிற்று. மேலும் உதவியவள் அவள் உயிரனைய தோழி!

அவர்கள் அடிக்கடி சந்தித்தனர். துறவைப் பழித்தனர். அதரங்களின் அமுதைப் பருகினர்!

அவன் பக்கத்து ஊர். அவளைச் சுவைக்க, வரவேண்டுமானால், கடும்புலி வாழும் இருண்ட காட்டைக் கடக்கவேண்டும்; அதனிடையே யானைகள் வசிக்கும் உயர்ந்த மலையைத் தாண்ட வேண்டும்; பாம்புகள் மலிந்து அகன்ற சுனைகளில் நீந்தவேண்டும்! கொடிய விலங்குகளுக்கும் அஞ்சாமல் இரவோடு இரவாக வருகிறாரே — மலைபோன்ற இடையூறுகளையும் மதிக்காமல் இருக்கிறாரே! அய்யோ! நம்மால் அவர்க்குளத் துணைத் துன்பங்கள் என்றெண்ணியது, அவளுடைய காதல் உள்ளம்.

தோழி! நமக்குத் தோழி! அதனால் ஒப்பினாள், நமது காதலை.

தாய்! பெற்றவள் வளர்த்தவள்! பிரிவுக்கு இசைவளோ? வசை மாரி பொழிவளோ?

தந்தை! எப்படியோ தெரியவில்லை. அறிவது கடினம்!

அலர் தூற்றும் ஊர், அன்பிலா நெஞ்சம் கொண்டது! களவு! காலம் முழுதும் செல்லாது—அவனைப் பிரிந்தால் அவள் உயிரும் நில்லாது!

துணிந்தாள் அவள்! நேற்று மாலை நேரம், மாமரச் சாலையோரம். காத்துக் கொண்டிருந்தாள் தன் காதலனுக்காக. அவன் வந்தான். வந்து, அவளை வாரி அணைத்து இன்ப சுகம் தந்தான். 'எங்கேயாவது போய்விடலாம்' என்றாள் அவனிடம். வெளியூர் ஏக சம்மதித்தான், அவனும்.

'இன்றிரவு'!...நாள் கணித்தாள்.

'நடுச்சாமம்!..,பொழுதுகுறித்தாள்.

'எங்கள் வீட்டுத்தோட்டம்..' இடமும் கூறினாள்!

'அருநெல்லி மரத்தின் கிளையை அசையுங்கள். கனிகள் உதிர்ந்து ஒலி எழுப்பும். அது கேட்டதும் நான் வந்துவிடுகிறேன்' என்று விளக்கமும்உரைத்தாள்.

'சரி' என்றான் அவன்!

அவன் தோள்கள் பூரித்தன. அதைக்கண்ட அவள் தன் மலர் விழியை அவன் மீது ஓட்டினாள். அதரங்களில் இளநகை காட்டினாள். கன்னங்களில் செந்நிறம் கூட்டினாள். நாணித் தலை தாழ்த்தினாள். குறிப்பறிந்த அவன் அந்த ஏந்திழையை அணைத்தான். அவளுடைய அலைக் கூந்தலை நீவினான். மதுர இதழ்களைக் கோதினான்!

சினங் கொண்ட நாகமும் சாரையுமாக இருவரும் பின்னினர், பிணைந்தனர்! பின்னர்...... பிரிந்தனர்!

இல்லம் வந்தாள். அவள் உள்ளம் துள்ளிக் கொண்டிருந்தது. இடையிலே சின்னாட்களாக அவள் இதயத்தை வருத்திக்கொண்டிருந்த அலர் தூற்றலை மறந்தாள். அன்னையின் அரவணைப்பை மறந்தாள். தன் களவுக்கு உறுதுணையாக இருந்த தோழியையும் மறந்தாள்!

சிறு குழந்தையைப் போல ஓடினாள். ஊஞ்சலில் அமர்ந்தாள். ஆடினாள் பாடினாள்!

யாரையும் எதிர்பார்க்கவில்லை. கண்ணாடியின் முன் பறந்துபோய் அமர்ந்தாள். கூந்தலை ஒப்பனை செய்து கொண்டாள். காந்தக் கண்களுக்கு அஞ்சனம் தீட்டினாள். அதிர்வளைகள் பல அணிந்தாள். பால் நுரையைப்பழிக்கும் ஆடையை உடுத்து இடையில் சுற்றினாள். கச்சையை இறுக்கிக் கட்டினாள். மெல்லிய மேகலை எடுத்து அதன் மீது தவழவிட்டாள். தயார்! பயணத்திற்கு அவள் தயார்!

ஆயிற்று! எல்லாம் ஆயிற்று இன்னும் அந்தப் பாழும் நடுச்சாமம் தான் ஆகவில்லை. சே! எவ்வளவு மந்தமான பொழுது! விரைந்து செல்லத் தெரியவில்லையே, அதற்கு!

நிலாமுற்றத்திற்கு வந்து நின்றாள். கூடத்திற்குச் சென்று அமர்ந்தாள். அதன் மூலையில் சிதறிக்கிடந்த வண்ண விளையாட்டுப் பொருள்களைப் பார்த்தாள். சிறிய சிறிய சொப்புகள், கழங்குக் காய்கள், பந்து.

அவளுக்குத் தன் குழந்தைப் பருவ நினைவு வந்தது. கால்கள், 'கல்கல்' என்று தண்டையின் நாதம் எழுப்ப, ஆடையின்றி ஆடியநாட்கள்! சிற்றாடை கட்டிச் சிறு சோறு சமைத்த பாங்கு! தோட்டத்தில் புன்னை ஒன்று நட்டு, அதற்குப் பாலும் தேனும்

இட்டு வளர்த்த காட்சிகள்! எவ்வளவு சிறிய கன்ருக நட்டாள் அதை. அந்தப் புன்னை இன்று நன்ருகத் தழைத்து,பொன்னிறப் பூக்களைப் பூத்து நறுமணம் பரப்பி, அனைவரின் கருத்தையும் அல்லவா கவர்கின்றது? ஆமாம் அவளைப்போலவே!

எதையோ நினைத்துக் கொண்டாள். விரைந்து தோட்டத்து வாசலுக்கு வந்தாள். பூத்துக் குலுங்கிப் புதுமணம் பரப்பி நிற்கும் அந்தப் புன்னையைப் பார்த்தாள் ஒரு கணம். உள்ளே வந்தாள்.

அவள், சிறிய குஞ்சிலிருந்து அன்புடன் வளர்த்துவரும் பச்சைக்கிளி! கூடத்தில் இருந்த மரகதமணிக்கூண்டில் இருந்தது. அதனிடம் ஓடினாள். அங்கிருந்த ஈரப் பலாச்சுளையை எடுத்து, தேனில் தோய்த்து ஊட்டினாள்.

அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. காரணமின்றி இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தாள். அவள் மகிழ்ச்சியைக் கண்ட அவள் அன்னைக்கு ஒரே பூரிப்பு! வண்ணக்கலாப மயில் தோகை விரித்தாடுவதைப் போலல்லவா இருக்கிறது தன் மகள் ஒயில்! அன்ன மென் நடை அல்லவா பயில்கிருள்! அவளை அருகிலழைத்து அணைத்து உச்சிமோந்து, முத்தமழை பொழிந்துவிட்டுச் சென்ருள் அவள் அன்னை.

அடடா! அவள் ஆடை கூந்தல் ஒப்பனை கலைந்து விட்டதே! பிறகு, 'ஏன்? ஒப்பனை செய்து வர உன் மனம் ஒப்பவில்லையா? நேரம் ஒழிய வில்லையா?' என்று அவர் கேட்டால்.....?

அவள் எண்ணம்சிணுங்கியது. விற்புருவங்கள் நெளிந்து நெற்றிக்கு ஏறி இறங்கின; மீண்டும் ஒப்பனை செய்து கொள்ள, நிலைக் கண்ணுடி தேடி ஓடினுள்.

'கண்ணே! உண்ண வா!' அன்னை அழைத்தாள்.

'வேண்டாம், அம்மா! செல்லவில்லை'...சிவப்பாம்பல் வாய் திறந்து வார்த்தை முத்துக்களை உதிர்த்தாள்.

மனத்திற்குள்...சே! அன்னை என்ருல் இப்படித்தானு? மதியமே கூறினேனே, இரவு உணவு வேண்டாம் என்று. இதில்தானு அன்பு தெரிந்துவிடும்? இப்போது இதுதானு வேண்டும்? இரவு வர வேண்டும். அத்துடன் அவரும் வரவேண்டும். அவருடன் இன்ப புரிக்குச் செல்லல்வேண்டும்! தற்போது அதுவல்லவா வேண்டும் நமக்கு!

இரவு வந்தது. முதற் சாமமும் முடிந்தது. இன்னும் சற்றுநேரத்தில் அவர் வந்துவிடுவார்......!

முடிந்தன நினைவலைகள். இரண்டாவதாக உள்ளத்திலிருந்து வெளியேறியது வெப்பமான பெருமூச்சொன்று!

அவர்க்கு முன்னர் நாமே சென்று தோட்டத்தில் காத்துக் கொண்டிருந்தால்.....ஆம்! அது

தான் முறை. இந்தக் கொடிய நெஞ்சம்தான் கொஞ்சமும் பொருக்கவில்லையே?

வெளியில் ஓரே அமைதி. இதயத்தில் ஓரே கொந்தளிப்பு! மெதுவாக எழுந்தாள். முழுமதி யன்ன தன் முகத்தின் ஒளியில் யாராவது எழுந்துவிட்டால்...? புகைபோன்ற மெல்லிய ஆடை எடுத்து முக்காடிட்டாள்.

கைவளைகள் குலுங்கின. அவற்றைக் கழற்றி வைத்தாள்! அஞ் செஞ் சீறடி நோக, அடுத்த அடி எடுத்து வைத்தாள். 'கல்...கல்!' அணி சிலம்புகள் அதிர்ந்தன. அவற்றையும் கழற்றிக் கட்டில் மீது வைத்துவிட்டாள்.

ஒதுங்கி ஒதுங்கிக் கூடத்திற்கு வந்தாள். மங்கலான விடிவிளக்கின் ஒளியில், அவள் அன்னை அமைதி தவழும் முகத்துடன் உறங்குவது தெரிந்தது. அவள் அன்னையின் சிறிய உதடுகள்... மாலை...தன்னை அருகில்இழுத்து அதரங்களில் அமுதத்தைக் குழைத்து, கூம்பும் அல்லியைப் போல இதழ்களைக் குவித்து அவள் கொடுத்த அந்த முத்தங்கள்...தன்னைப்பற்றி அவள் இதயத்தில் கனிந்திருக்கும்அன்பு ...'அந்த அன்பின் திரு உருவத்தை அல்லவா விட்டுப் பிரியப் போகிறோம்?'

அவளுக்கு 'சுருக்' கென்றது. பொழுது விடிந்ததும் நம்மைக் காணாது அழுது புலம்புவாளே நம் அன்னை! பெற்றாள்...வளர்த்தாள்...பெயரிட்டாள். பெரியவளாக்கினாள்!... எப்படி அவளை விட்டுப் பிரிவது?

அவள் மனத்தில் சிந்தனைக் கொக்கரிப்பு! ஓடிவந்து படுக்கையில் வீழ்ந்தாள். குலுங்கக் குலுங்க அழுதாள். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. வேதனையைச் சகிக்க முடியவில்லை.

சிரித்துக் கொண்டிருக்கும் அவளுடைய மலர்க் கண்கள் நீரைச் சிந்திச் சிந்தி சிவந்துவிட்டன! இந்தக் கோலத்தோடு அவர் பார்த்துவிட்டால்......?

அவர்......அவர்......!'

அவன் தோற்றம் அவள் கண்ணெதிரில் வந்து நின்றது. தாயை மறந்தாள். தன்னை யறியாமலேயே எழுந்தாள். அமைதியில் ஆழ்ந்திருந்தது அன்னையின் முகம்! திரும்பிப் பார்க்கவில்லை அதை. அன்னையைக் கடந்து சென்றாள்.

கூடத்து மூலையில் கூட்டமாக இருந்தன அவளுடைய விளையாட்டுப் பொருள்கள். அவற்றைப் பார்த்தாள். அவள் மனம் மருண்டது.

'நாளை......அன்னை இவற்றைப் பார்ப்பாள். இவைதாம் என் மகள் ஆடிய கழங்குக் காய்கள்! இதுதான் அவள் ஆடிய பந்து! இவற்றை இனி எடுப்பார் இல்லை' தோட்டத்தில் பூக்கும் முல்லையைத் தொடுப்பார் இல்லை என்று எண்ணி எண்ணி மனம் வெதும்

பூவாளே! சொல்லிச் சொல்லி தோழியைப் பார்த்து அரற்றுவாளே......தோழியும் அன்னையின் சோகம் கப்பிய முகத்தைப் பார்த்துப் பார்த்துக் கதறுவாளே!'

அவள் நெஞ்சம் அந்த அவலக் காட்சியை நினைத்தது. உளம் துடித்தாள். பதை பதைத்தாள்! தறியிடை நாடாவாகத் தவித்தாள். அவளால் நிற்கமுடியவில்லை. மாநிற உடல் முழுதும் வியர்வையால் நனைந்துவிட்டது. கால்கள் நிற்கும் சக்தியை இழந்தன. தளர் நடையுடன் தன் அறைநோக்கி ஓடினாள்.

கொழு கொம்பு தவறிய பூங்கொடி போல மலரணையில் வீழ்ந்து மனம் வருந்தினாள்; குழம்பினாள்.

யாரை மறப்பது? தாயையா... ......காதலனையா?

இன்று வருவதாக அல்லவா அவரிடம் கூறிவிட்டோம். ஏன் அவ்வாறு கூறினோம்! அவசரப்பட்டுக் கூறினோம். இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுத்திருக்கக் கூடாதா! 'நான் ஒரு அவசரக்காரி!' தன்னைத்தானே நொந்து கொண்டாள்!

அவர் ஒருவேளை தோட்டத்திற்கு வந்து காத்திருப்பாரா? அவருடைய அகன்ற மார்பு, தடந்தோள்கள், நீண்ட கைகள், அந்தக் கைகளின் இறுகிய தழுவல்! அவள் உடல் புல்லரித்தது. களிப்பு நீர் அவளுடைய கடைக் கண்களில் கூடு கட்டியது. கொவ்வை இதழ்கள் குவிந்து விரிந்தன! அவர் வந்திருப்பார்! எண்ண அலைகள் அவளைத் தொட்டு எழுப்பின. வாழைத் தொடைகள் இழைந்தன! ஆம்! அவள் நடந்தாள். அன்னையைக் கூடத்தைக் கடந்தாள்.

கூண்டிலிருந்த கிள்ளை எதிர்ப்பட்டது! அந்தக் கிளி ஆடாமல் அசையாமல் மணிக் கூண்டின் இடையில், செலுத்தப்பட்டிருந்த பொற் பிரம்பின்மீது, ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்தது. அதற்கும் உறக்கம்! ஆகா! அதற்குத்தான் அவளிடம் எவ்வளவு அன்பு. அவள் ஊட்டினால்தான் அது பழம் உண்ணும். பால் அருந்தும். வேறு யார் கொடுத்தாலும் அது ஏற்காது. பசியெடுத்தாலும் உண்ணாது. நீர் வேட்கை இருந்தாலும் பால் அருந்தாது. உறங்காது! உறக்கமும் அதனிடம் அணுகாது! நாளைக்கு அக் கிள்ளைக்குத் தோல் நீக்கிச் சுளை தருவார் யார்? அதன் களை போக்கித் தெம்பு ஊட்டுவார் யார்? அதற்குத் தேன் தருவார் யார்? வாடும் அதன் உள்ளத்தைத் தேற்றுவார் யார்? நினைவுக் கடலில் மிதந்தாள், அவள் தோட்டத்துக் கதவைத் திறந்தாள். புன்னைமரம் நின்று கொண்டிருந்தது. அதன் அடியில் அவளும் அவளுடைய தோழியும் சிற்றில் கட்டிச் சிறு சோறு சமைத்த நாட்கள்... அதன் கிளையில் பொன்னூசல் கட்டிப் பொம்மையை வைத்து ஆடிய நாட்கள் நினைவிற்கு வந்

தன. வந்து நெஞ்சத்தைக் கலக்கின.

இவற்றையெல்லாம் விட்டு விட்டு எப்படிப் போவது? இவற்றை விட்டுவிட்டு எப்படிப் பிரிவது? அன்பிலா நெஞ்சம்... என்நெஞ்சம்...கொடிய நெஞ்சம்!

நிலை கலங்கினாள் அவள். மீண்டும் படுக்கையை நோக்கிஓடினாள். அம்புபட்ட பறவையைப் போல அறுத்துப் போட்ட முல்லைக் கொடி போல படுக்கைமீது விழுந்தாள். தேம்பித் தேம்பி அழுதாள்!

வெளியில் ஒரே அமைதி! ஊரே உறங்கியது. அவள் உள்ளமோ கொந்தளித்துக் கொண்டிருந்தது!

அவர் யார்? நான் யார்? அவருக்காக நாம் ஏன் இவ்வளவு துன்பம் அடைய வேண்டும்? என் நெஞ்சம் ஏன் அவர் பின்னாலேயே செல்கிறது?

அவள் எண்ணினாள். அவர் யாரோ...நாம் யாரோ? அன்றொரு நாள்...தினைப்புனத்தில்... ...அவரும் இதைத்தானே சொன்னார்? எவ்வளவு அழகாகச் சொன்னார்?

அவள் இதயம் விம்மித் தணிந்தது. அன்று அவன் மடியில் அமர்ந்து, அவன் மார்பில் சாய்ந்திருந்தாள் அவள். அவன் கூறினான்.........

"உயிரே! என் தாயும் உன் தாயும் யார் யாரோ? ஒருவரை ஒருவர் அறியார்! என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையில் உறவு? எம்முறையிலும் உறவினரல்லர்! உன் தாயும் உன் தந்தையும் எங்கேயோ வெவ்வேறிடத்தில் பிறந்து வளர்ந்து ஒன்று கூடினர். நீ பிறந்தாய்! என் தாயும் என் தந்தையும் எங்கேயோ வெவ்வேறிடத்தில் பிறந்தனர்—வளர்ந்தனர்—ஒன்றாக இணைந்தனர்—யான் பிறந்தேன்!

'அன்பே நீ யாரோ......யான் யாரோ? நீ எங்கேயோ பிறந்தாய் வளர்ந்தாய்! யான் எங்கேயோ ஓரிடத்தில் பிறந்தேன்...வளர்ந்தேன்! யானும் நீயும் எதனால் ஒருவரை ஒருவர் அறிந்து, ஏன் இப்படி உயிரோடு உயிராக ஒன்றினோம்?

'இதற்கெல்லாம் காரணம் அன்புடை நெஞ்சமே! ஆகாயத்தில் மேகம் இருக்கிறது. நிலத்தில் செம்மண் இருக்கிறது. எவ்வளவோ இடைவெளி! இடமும் வெவ்வேறு! ஆனால், மேகத்திலிருந்து மழை பொழிந்தால், அது செம்மண் நிலத்தில் கலந்து தானும் செம்மையாக மாறிவிடுகிறது. மறுபடியும் செந்நிறத்தை வேறாகவும், மழை நீரை வேறாகவும் பிரிக்கவே முடிவதில்லை. அதைப் போன்றுதான், செம் புலத்தில் பெய்த மழை நீரைப் போன்றுதான் அன்புடை நெஞ்சமும்! எவ்வளவு தூரத்தில் இருந்தாலும், எத்தகைய தடைகள் இடைமறித்தாலும் பொருட்படுத்தாமல் பிரித்தெடுக்க முடியாத

வாறு, ஒன்றில் ஒன்று கலந்து கொள்கின்றது.''

அன்று அவன் கூறிய சொற்கள் அவள் இதயத்தில் ரீங்காரமிட்டன!

ஆகா! எத்தகைய அழகான விளக்கம்......ஆழ்ந்த கருத்துக்கள்!......இதைக் கூறிய அவர் அறிவு வாழ்க! உடலியலையும் உளவியலையும் எவ்வளவு ஆழமாக அறிந்து வெளியிட்டார்? வாழ்க, அவர்தம் அறிவு...அன்பு!

வதங்கிக் கிடந்த அந்த வஞ்சிக் கொடி, தன் குங்கும இதழ்களைத் திறந்து வாழ்த்தினாள் அவனை!

அடுத்த கணம்...! அவன்மீதே அவளுக்கு இரக்கம் தோன்றியது. அவளுக்கும் அவனுக்கும் இடையில் இருந்த மலை போன்ற ஊறுகளை நினைத்தாள். படிப்படியாக, பழையபடி அவள் உள்ளம் கொந்தளிக்கத் தொடங்கியது. இதயத்தில்.........

ஒரே கொந்தளிப்பு! அலைகடல் ஆகாயமளவுக்கும் பொங்கி எழுந்து சீறும் கொக்கரிப்பு! அவள் உள்ளத்தில்.........மின்னல் மின்னிற்று. புயல் அடித்தது. பெருமழை பொழிந்தது!

வெளியிலும்......கார் மேகங்கள் ஒன்றுகூடின. மின்னல் வெட்டிற்று. அண்டம் அதிரும்படி இடி இடித்தது. மழை பொழிய ஆரம்பித்தது!

இவ்வளவுக்கும் இடையில்... டாண்..............!

நடுச்சாமம் பிறந்தது. ஊர்க் காவலன் மணியை ஓங்கி அடித்து ஒலியெழுப்பினான்.

அவர் வந்திருப்பாரா? வந்தால் நெல்லிக்கனியை உதிர்த்து ஒலியெழுப்புவாரே...........

'சட...சட...சட...சட....!' வென்ற ஒலி! ஆம் அவர் வந்து விட்டார்! கிளையை அசைத்திருப்பார். அருநெல்லிக்கனிகள் உதிர்கின்றன. ஒலி கேட்கின்றது!

அவர் வந்துவிட்டார்—தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

படபடத்தன, அவளுடைய குவளை மலர்க் கண்கள்! தேன் கசிந்து நெளிந்து குழைந்தன, கொவ்வை இதழ்கள்! ஒளிவீசித் திகழ்ந்தது பிறைநெற்றி! கிளர்ந்து சிரித்தன இரு செந்தாமரை மொட்டுகள்! பூரிப்பால் புளகாங்கித மடைந்தது பொன்னிற உடல்! இதயத்தில் ஒருவித கிளுகிளுப்பு—இன்பக் கொப்பளிப்பு!

மலரணையிலிருந்து துள்ளி எழுந்தாள்! அவள் அங்கி சரிந்து விழுந்தது, அவள் உணர்வு அவளுக்கு இல்லை. அவள் தோட்டத்தை நோக்கி நடந்தாள்.

'மகளே—மகளே' — உறக்கத்திலிருந்த அவள் அன்னை ஏதோ கனவுகண்டு வாய் வெருவினாள்!

அந்தச் சொற்கள் அவள் காதுகளில் பாயவில்லை. அவள் நடந்தாள். 'அக்கா...அக்கா' விழித்துக்கொண்ட கிள்ளை அழைத்

தது. அந்த அன்பழைப்பு அவள் செவிகளில் விழவில்லை. மேலும் நடந்தாள். எலி ஒன்று தள்ளிய தால் பந்தும் கழங்குக் காய்களும் உருண்டுவந்து அவள் கால்களில் மிதிப்பட்டன.

அதை அவள் அறியாள். அவள் தன் உணர்வின்றி இயங்கினாள். அவன் அன்பு அவளை இயக்கியது. அவள் இயங்கினாள். கைகள் தாழ்ப்பாளை அகற்றிக் கதவைத் திறந்தன!

அவன் வந்திருப்பதைக் கூற அவள் தோழி அங்கு நின்றிருந் தாள். ஆனால் அவள் கண்களுக் குத் தோழி நிற்பதுகூடத் தென் படவில்லை.

அவளுக்கு ஒரே மயக்கநிலை. தோட்டத்தில்......ஒரே மழை! பேய் மழை. காற்று சுழன்று சுழன்று வீசியது!

அவளோ தோட்டத்தின் ஓரத் திலிருந்த நெல்லி மரத்தை நோக்கி ஓடினாள்.

புன்னை தன் பொன்னிறப் பூக் களை அவளுடைய மலர்மேனி மீது, 'பொல—பொல' வெனக் கொட்டியது.

அவளுக்கு ஒன்றுமே தெரி யாது. நீர்நிலைகளிலிருந்த தவளை கள் பேரிரைச்சலை எழுப்பின. விழித்துக்கொண்ட நாய்கள் உரத்த குரலில் குரைத்தன. பற வைகள் சிறகடித்துக் கிளைக்குக் கிளை தாவின.

எங்கும் ஒரே கூக்குரல்...... கொந்தளிப்பு...... இயற்கையின் காட்டுமிராண்டித் தனமான பேய்ச் சிரிப்பு.

ஆனால்.........

அவள் உள்ளத்தில் ஒரே அமைதி. ஆழ்கடலின் அடியில் உள்ள அமைதி. எங்குமே எது வுமே நடக்காதது போன்ற ஆழ்ந்த அமைதி.

மழையில் நனையும் உணர்வே அவளுக்கு இல்லை. 'நெல்லிமரம்' —அந்த இருட்டில் அவள் கண் கள் அதன் அடியைத் துருவின. அங்கே...?

கரிய ஓர் உருவம். பார்த்து விட்டன அவள் ஒளிக் கண்கள். அவர்...அவர் என்று கூவினாள் அவள். வில்லிலிருந்து புறப் பட்ட அம்பு போல் பறந்தாள். ஓடிச் சென்று சூடேறிக்கிடந்த அவன் அகன்ற மார்பில் மலர் முகத்தைப் புதைத்துக்கொண்டு, அவன் கட்டுடலைத் தழுவிக் கொண்டாள். அவனோ, அவளை ஆரத் தழுவி இன்னும் இறுக அணைத்துக்கொண்டான். ஈருட லும் ஓருடல் ஆயிற்று. இடை யில் காற்றுப் புகமுடியாமல் தத்த ளித்தது. அவளுக்கு மூச்சுத் திண றியது. ஆனாலும் அந்த அணைப்பு அவளுக்கு இதமாக இருந்தது. இன்ப உணர்வால் மெய்ம் மறந் தாள்.

•

ஒரே மயக்கம்—இருவருக்கும்.

'பேய் மழையில் இப்படி நனை கின்றனரே!'

அவள் தோழி, 'தோழி தோழி' என்று அழைத்துக் கொண்டே அவர்களை நோக்கி வந்தாள். ஆனால்?

அவர்கள் செவிகளில் பரிவு நிரம்பிய அந்தச் சொற்கள் விழவில்லை.

அவனும் அவளும் வேலியைத் தாண்டி எங்கேயோ சென்று கொண்டிருந்தனர்.

துணை:—

"யாயும் யாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும்
எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி
அறிதும்?
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்
கலந்தனவே!"

(குறுந்தொகை 40)

---

### எஸ். எஸ். எல். சி. தேர்வில்

# பெண்களுக்குச் சலுகை

## தனியே எழுத அனுமதி

பெண்களுக்கு கல்விச் சலுகையை விஸ்தரிப்பதில் சென்னை சர்க்கார் மற்றொரு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். சில நிபந்தனைகளுக்குட்பட்டு எஸ். எஸ். எல் சி. பரீட்சைக்கு அவர்கள் பிரைவேட்டாக ஆஜராகச் சலுகையளிப்பதென்பதே இந்த நடவடிக்கையாகும்.

### அனுமதி

20 வயதானவர்களும் ஈ. எஸ் எல். சி. அல்லது 8-வது வகுப்பு பரீட்சை தேறியுள்ள பெண்கள் எஸ். எஸ். எல். சி. அல்லது புதிய 10-வது வகுப்பு பரீட்சையில் பிரைவேட்டாக எழுத அனுமதிக்கப்படலாமென்பது சர்க்கார் சமீபத்தில் செய்துள்ள முடிவாகும்.

### அமுல்

இந்த முடிவை உடனடியாக அமுலாக்கும்படி சர்க்கார் பரீட்சைகளுக்கான கமிஷனரை சர்க்கார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பெண்கள் விஷயத்தில் இந்த வசதியை அளிக்க வேண்டுமென்று சர்க்காரிடம் கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்து அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# வரதட்சணை வாங்கினால் ஜெயில்!

## டெல்லி சட்டசபையில் சட்டம் நிறைவேறியது!

கல்யாண சமயத்தில் பெண் வீட்டாரிடமிருந்து மாப்பிள்ளை வீட்டார் வரதட்சணை (பரிசுப்பணம்) வாங்கினால் ஜெயில் தண்டனை விதிக்கப்படும்!

இந்தச் சட்டம் டெல்லி சட்ட சபை மேல் (சட்ட) சபை ஆகியவைகளின் கூட்டுக் கூட்டத்தில் நிறைவேறியது.

### கூட்டுக் கூட்டம்!

வரதட்சணை சட்டம் சம்பந்தமாக டெல்லி சட்டசபைக்கும், மேல் (சட்ட) சபைக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் இரு சபைகளின் கூட்டுக் கூட்டம் நடந்தது!

2 நாள் பேச்சுக்குப் பிறகு சில திருத்தங்களுடன் சட்டம் நிறைவேறியது! அதன்படி கல்யாணத்துக்கு வரதட்சணை வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்கிறவர்களுக்கு ஜெயில் தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படும்!

மறைமுகமாக வரதட்சணை வாங்கினாலும் இதே தண்டனை தான்! கல்யாணத்தின்போது பரிசு, கொடுக்க அனுமதிக்கப்பட்டு இருக்கிறது! ஆனால் கல்யாணத்துக்கு என்று எண்ணமிட்டுச் செய்ததாக இது இருக்கக் கூடாது!

இதை எதிர்க் கட்சி மெம்பர்கள் எதிர்த்தார்கள்! பணமாகவும் நகையாகவும் கொடுத்தபிறகு வரதட்சணை என்று கொடுக்க என்ன இருக்கிறது என்று பூபேஸ் குப்தா கேட்டார்!

### சட்டத்தால் முடியாது!

இதுபோல சட்டம் போட்டு வரதட்சணையை ஒழிக்க முடியாது என்று ஜெயபால் சிங் என்ற மெம்பர் சொன்னார்.

சட்டத்தை மீறி வரதட்சணை கொடுக்கப் புதிய வழிகளைக் கண்டு பிடித்துவிடுவார்கள் என்றும் அவர் சொன்னார்!

பெண்களுக்குக் கல்யாணம் செய்வதுதான் பாதுகாப்பு என்ற நிலை இருக்கும்வரை ஏதாவது ஒரு வழியில் வரதட்சணை முறை நீடிக்கும் என்றும் அவர் சொன்னார்!

வரதட்சணைக் கொடுமை ஒழிய இந்தச் சட்டம் உதவியாக இருக்கும் என்று தமிழ்நாட்டுப் பெண் உறுப்பினர் பார்வதி கிருஷ்ணன் சொன்னார்.

# நாற்பதுக்கு மேலும் சுகவாழ்வு

ஜே. ஜே. துரைராஜ் பி.ஏ., எல். டி.

ராமுடு: என்னப்பா, சீதாராம், எள்ளு விதைத்துக் கொண்டே வருகிறாயே!

**சீதாராம்:** இன்னும் கொஞ்சம் வருஷம் போனால், நீ எள்ளு மாத்திரமல்ல, கொள்ளும் விதைப்பாய். . . என்னடா பண்ணுகிறது? வயது நாற்பதுக்கு மேலே ஆயிடுச்சு. இனியும் முந்தி இருந்த மாதிரி இருக்க முடியுமா? வீடு போ, போன்னு சொல்ல ஆரம்பித்துவிட்டது.

**ரா:** என்ன, எழுபது வயதுக் கிழவன் மாதிரி உளற ஆரம்பித்து விட்டாய். மேற்கத்திய நாடுகளில் "நாற்பது வயதுக்கு மேல் தான் வாழ்க்கை ஆரம்பமாகிறது" என்ற பழமொழி ஒன்று இருக்கிறது. தெரியுமா?

**சீ:** தெரியும். அது ஒரு வகையில் வாஸ்தவம் தான். இவ்வளவு நாளும் ஒரு நோயோ, நொடியோ, வலியோ இல்லாமலிருந்தேன். அப்பொழுது வாழ்க்கையைப் பற்றி ஒன்றுமே நான் நினைக்கவில்லை. ஆனால் இப்போது தான் எலும்பு மூட்டுகள் எல்லாம் கிறீச் கிறீச்சென்று எண்ணெயைக் காணாத கீல்கள் மாதிரி சத்தம்போட ஆரம்பித்து விட்டன. உட்கார்ந்தால் எழுந்திருக்க முடியவில்லை. எழுந்திருந்தால் சட்டென்று உட்கார முடியவில்லை. காலை நீட்டினால் மடக்க முடியவில்லை. மடக்கினால் நீட்ட முடியவில்லை. . .

**ரா:** போதும், போதும், நிறுத்து.

**சீ:** அப்படி ஒன்றும் இல்லாததை நான் சொல்ல வரவில்லை.

**ரா:** இருபதிலிருந்து முப்பது மட்டும் இரும்பு உடல் என்பார்கள். என்னத்தையும் சாப்பிடலாம். எதையும் செய்யலாம்.

**சீ:** ஆனால் நாற்பது வயதுக்கு மேலே தான் இருப்பு உடலில் துருப்பிடிக்கிறது, இல்லையா? சுகாதார விதிகளை மீறிவிட்டு இலகுவாய்த் தப்பித்துக்கொள்ள முடிவதில்லை.

**ரா:** நீ சொல்லுகிற மாதிரி நம் உடல் மலையிலிருந்து உருட்டிவிட்ட கல் மாதிரி கீழாகவே போய்க்கொண்டிருப்பதில்லை. இப்படிப்பட்ட அசந்தர்ப்பங்களைச் சமாளிக்க அதற்குச் சில சக்திகள் இருக்கின்றன. ஆனால் சுக வாழ்வின் வழியை விட்டு அடிக்கடி விலகிப் போய்க்கொண்டே இருந்தால் சீர்ப்படுவது கடினம்.

**சீ:** பிறந்த உடனேயே சாக ஆரம்பித்துவிடுகிறோம்! வளர்ச்சி என்று நாம் நினைப்பதெல்லாம்

வாழ்க்கைப் பாதையில் ஆங்காங்கு ஏற்படும் திருப்பங்கள் தான். வேறு இல்லை. பத்து வயதிலேயே தம் கண்களின் மீள்சக்தி (elasticity) குறைந்து போகத் தொடங்குகிறதாம். இருபதில் சத்தத்தைக் கேட்கும் கூர்மை மழுங்குகிறது. நாற்பதில் கண் பார்வையில் தோஷம் தோன்றுகிறது. அறுபதில் முகரும் தன்மை மங்குகிறது. எழுபதில் மனிதன் தன் வலுவில் மூன்றில் ஒரு பாகத்தை இழக்கிறான். எலும்புகள் மிருதுத் தன்மையை இழந்து போவதால், காய்ந்து போன குச்சி மாதிரி இலகுவில் முறியக் கூடியவைகளாகின்றன. தசைகளோ தங்கள் வீரியத்தில் 16 சதவிகிதத்தைப் பறிகொடுக்கின்றன.

ரா: நீ சொன்னவைகள் எல்லாம் உண்மையாக இருக்கலாம். அதனாலேயே எப்பொதும் நடைப் பிணங்களாகவே திரிய வேண்டுமா? அப்போது அப்போது தோன்றுகிற குற்றங்களையும் குறைகளையும் டாக்டர்களின் உதவியாலும் நம்முடைய புத்தியாலும் நீக்கிக்கொண்டே தான் வரவேண்டும்.

சீ: அப்படிவா வழிக்கு. நானும் அதைத் தான் சொல்லுகிறேன். கொஞ்சம் கவனமாகக் கேள். நமது உடலின் சுக நிலைக்கு இன்றியமையாததாக இருப்பது பிராணவாயு. இதை இயற்கை இலவசமாக அளிக்கிற காரணத்தினலேயே அனேகர் இதை மதிப்பதில்லை. நாம் சுவாசிக்கிற காற்றுக்கு வரி கொடுக்க வேண்டுமென்று சட்டம் இயற்றிவிட்டால், அல்லது பிராணவாயுவைப் புட்டிகளில் அடைத்துக் கடையில் விற்றால், ஒருவேளை அனேகர் அதைப்பற்றி அதிகமாய்க் கவலை எடுத்துக் கொள்வார்கள்.

ரா: சத்தமாய்ச் சொல்லாதே. யார் காதிலேயும் விழுந்துவிடப் போகிறது! அது இருக்கட்டும். இந்தப் பிராணவாயுவை நாம் எப்படிப் பெற்றுக்கொள்வதென்று உனக்குத் தெரியுமா?

கணங்களுக்குப் பிராணவாயு போய்ச் சேருவதற்காக உடலிலுள்ள ஏற்பாடுகளைக் கவனித்தால், பிரமிப்பாக இருக்கும். நம் புப்புசங்களிலுள்ள 75,00,00,000 காற்றுப்பைகளின் வழியாய்த் தான் காற்று இரத்தத்தை அடைய முடியும். இந்த மிக நுண்ணிய பைகளை ஒன்றுக்குப் பக்கத்தில் ஒன்றாகப் பரப்பினால், சுமார் ஐந்நூற்று ஐம்பத்தைந்து சதுர அடிகளாகும்.

சீ: அதிசயமாக இருக்கிறதே!

ரா: இன்னும் கேள். ஒரு விநாடியில் நமது உடலிலுள்ள மொத்த இரத்தத்தில் கால் பகுதி புப்புசத்தின் வழியாகச் செல்கின்றது.

சீ: அப்ப, மொத்தம் எவ்வளவு இரத்தம் நமது உடலில் இருக்கிறது?

**ரா:** ஏறக்குறைய பன்னிரண்டு பைண்ட்.

**சீ:** பைண்டோ குயின்டோ! எனக்குப் புரிகிற மாதிரி சொல்.

**ரா:** ஒன்றரைக் காலன் என்று வைத்துக்கொள்ளேன்.

**சீ:** புப்புசங்களுக்கு வந்து சேரும் இரத்தத்திற்கு என்ன நேரிடுகிறது?

**ரா:** இரத்தத்திலுள்ள கரியமிலவாயு நீக்கப்பட்டு, புதிதாய்ச் சுவாசித்த காற்றிலிருந்து பிராணவாயு கிடைக்கிறது. பிறகு இரத்தம் அவசர அவசரமாக எல்லாக் கணங்களுக்கும் பிராணவாயுவை எடுத்துச் செல்லுகிறது. குறிப்பிட்ட இவ்வேலையைச் செய்வதற்கென்றே இரத்தத்தில் சிவப்பு வடிகங்கள் இருக்கின்றன. ஒரு சொட்டில் சுமார் ஐம்பது மில்லியன் வடிகங்கள் இருக்கின்றன. வேலையின் கடுமையால் அவை முப்பது நாட்களுக்கு மேல் உயிர் வாழ்வதில்லை. ஒவ்வொரு விநாடியும சுமார் முப்பது இலட்சம் சிவப்பு வடிகங்கள் இரத்தத்தில் உற்பத்தியாகிக்கொண்டே இருக்கின்றன. ஒரே ஒரு முக்கிய நோக்கமே இந்த பிரமாண்டமான ஏற்பாடுக்குக் காரணம். அதாவது கணங்களுக்குப் பிராணவாயுபோய்ச் சேர வேண்டும் என்பது.

இன்னொரு அற்புதமும் உண்டு நான்கு மாதங்களில் நமது இரத்தம் முழுவதுமே புதிதாகச் சிருஷ்டிக்கப்படுகிறது.

**சீ:** இரத்தம் நமது உடலிலே சதா சுழன்றுகொண்டே இருக்கிறது என்று யார் முதலாவது கண்டு பிடித்தது?

**ரா:** பதினேழாவது நூற்றாண்டில் வாழ்ந்த டாக்டர் ஹார்வி என்பவர். ஆனால் சீனர்கள்...

**சீ:** சீனர்கள் என்னசொல்லுகிறார்கள்?

**ரா:** எல்லாம் தங்கள் ஆட்களே இதையும் கண்டுபிடித்தார்கள் என்று பிடிவாதம் பண்ணுகிறார்கள். கிறிஸ்துவுக்கு முன் சுமார் 2650-ம் ஆண்டில் ஹவாங்-டி என்ற சீனச் சக்கரவர்த்தி தான் இருதயத்தின் செய்கையால், இரத்தம் உடலில் சுழலுகின்றது என்று சொன்னார் என்று கூறுகிறார்கள்.

**சீ:** அதைப் பற்றி இப்பொழுது நமக்கென்ன சர்ச்சை வேண்டியிருக்கிறது? பள்ளிப் பையன் ஒவ்வொருவனுக்கும் இந்த இரகசியம் இப்பொழுது நன்றாகத் தெரியும்...

என்னமோ பிராணவாயுவிலே ஆரம்பித்தாய், இப்போ சீனநாட்டு எல்லைக்குள் பாய்ந்துவிட்டாயே!

**ரா:** பிராணவாயு குறைந்தால், அதிகமாய்ப் பாதிக்கப்படுவது நமது மூளையிலுள்ள கணங்கள் தான். எல்லோரும் விரும்புவது திறமையுள்ள மூளையே. சரியாய் யோசித்து, திட்டமான முடிவுக்கு வந்து, உணர்ச்சிக்கு

அடிமையாகாமல் எவனுடைய மூளை இருக்கிறதோ அவனுக்குள்ளே இருக்கிறது வாழ்க்கையின் பரம இரகசியம்.

**சீ:** சரிதான், தலைக்கேறிவிட்டாய்.

**ரா:** [illegible] உடலை [illegible] மோ மூளை தான். இங்கு மின்சாரம் உண்டாக்கப்படுகிறது... இந்த மின்சாரத்தை அளப்பதற்குக் கருவிகள்கூடக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதன் உதவியால் மூளையின் எந்த இடம் வேலை செய்யவில்லை என்றும், எங்கே கட்டி முதலியவைகள் [illegible] கண்டு கொள்ள முடியும்.

**சீ:** ஆமாம், இந்த மின்சாரம் எப்படிப் பிறப்பிக்கப்படுகிறது?

**ரா:** நாம் சுவாசிக்கும் காற்றிலுள்ள பிராணவாயுவே இதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

**சீ:** அப்படியா? இது வாஸ்தவம்தான் என்று நான் நம்பத் தயார். நேற்று இரவு குளிர் அதிகம். எங்கள் குடும்பத்திலுள்ளவர்கள் எல்லோரும் அறையின் கதவையும் ஜன்னல்களையும் அடைத்துக்கொண்டு தூங்கினோம். கொஞ்ச நேரம் கனகனவென்று நன்றாய்த்தான் இருந்தது. அதற்கப்புறம் எனக்குத் தலை என்னமோ செய்கிறமாதிரி இருந்தது. கதவையும் ஜன்னல்களையும் திறந்துவிட்டபின் தான் உயிர் வந்தது.

**ரா:** விஞ்ஞானிகள் சொன்னதை நீ அனுபவத்தில் கண்டுவிட்டாய். போதுமான பிராணவாயு இல்லாவிட்டால் மூளை மந்தப்படுகிறது. காரணங்களுடன் ஒரு காரியத்தை ஆராயும் ஆற்றல் குறைகிறது. நிதானம்கூடக் குன்றிப் போகும்! ஆக்ஸ்ஜான் எஸ். ஹால்டேன் பிராணவாயு குறைந்தால், மறதி அதிகரிக்கும் என்று சொல்லுகிறார். நமது நரம்பு மண்டலமும் மூளையும் சரிவர வேலை செய்யப் பிராணவாயு அதிக அவசியம்.

**சீ:** ஆகவே, நாம் சரியாய்ச் சுவாசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்! [illegible] நீ சொல்ல வந்தாய்!

**ரா:** ஆம்! அதற்காகச் சில விதிகளையும் கூறுகிறேன், கேள். திறந்த வெளியில் சுவாசப் பயிற்சி செய்வது நலம். மூக்கின் வழியாக மாத்திரமே சுவாசிக்க வேண்டும். இன்னும் அதிகமாக மூச்சு இழுக்கப் பிரயாசைப்பட வேண்டும். காற்றை வெளியிடும்போது, வாயைத் திறந்து வெளியிடலாம். இப்படிச் செய்தால்...

**சீ:** நிறுத்து! அதற்கு மேல் நான்சொல்லுகிறேன்...நன்றாய்த் தூக்கம் வரும், கூடுதலாகச் சாப்பிடலாம், இரத்த ஓட்டம் சுறுசுறுப்பாகும்.

**ரா:** சுருங்கக் கூறுமிடத்து, நல் வாழ்வு வாழலாம்.

**சீ:** "நாற்பதுக்கு மேலும்" என்று சொல்ல மறந்துவிட்டாயே!

(நல்வழி)

**Edited Printed and Published by P. VEERARAGHAVAN,**
**at Venkatesan Press 2/65, Broadway, Madras-1.**